வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 07.12.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 02 | பக்கங்கள் : 16

# ‘யாழ்ப்பாண ஆறு’ திட்டம் தயாரிக்கிறது நெதர்லாந்து!

கொழும்பு, டிசெம்பர் 07

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர், பாசனத்துக்கான தண்ணீர் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக ‘யாழ்ப்பாணத்துக்கான ஆறு’ திட்டத்தை நெதர்லாந்து அரசாங்கம் தயாரித்து வருவதாக இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் தன்ஜா கோங்கிரிஜ்ப் தெரிவித்துள்ளார்.**

கடந்த வியாழக்கிழமை இந்த தகவலை அவர் வெளியிட்ட நிலையில், அண்மையில் பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுற்றாடல் அதிகார சபையின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் ஆற்றிய உரையும் முக்கியத்துவம் பெறுகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் 70 வீதமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டுப்பாடுகளை இலக்காகக் கொண்ட நாடாக இலங்கையை மாற்ற நெதர்லாந்து தொடர்ந்து ஆதரவளிக்க

15

## சமையல் செய்யும்போது தலைக்கவசம் அணியுங்கள்!

### அடுப்பு வெடித்து தப்பிய பெண்



கொழும்பு, டிசெ. 07

“நான் சமைக்கும் போது தலைக்கவசம் அணிந்திருந்ததால் அடுப்பு வெடித்தபோதும் எந்தப் பாதிப்பும் இன்றி தப்பினேன். இந்த நாட்களில் சமைக்கும் போது தலைக்கவசம் அணியுங்கள்”, என்று கூறியுள்ளார் சிலிண்டரை மாற்ற முயன்றபோது அடுப்பு வெடித்ததில் காயமின்றி தப்பிய பெண்.

குருநாகல் - பன்னல - ஹெத்திரிப்புவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிலிண்டரை மாற்றிய போது அடுப்பு வெடித்து பறந்தது.

15

## தொற்றுக்கு 23 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 07

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் நாடு முழுவதும் 23 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில், 30 - 59 வயது பிரிவில் 2 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 3 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 13 ஆண்களும், 7 பெண்களுமாக 20 பேரும் உயிரிழந்தனர்.

இதனால், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 484 ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## 3 மணி நேரமே நேற்று பாராளுமன்று கூடியது!

கொழும்பு, டிசெ. 07

பாராளுமன்ற வரவு - செலவு திட்ட விவாதம் நேற்று மூன்று மணி நேரத்துடனேயே நிறைவடைந்தது. வரவு - செலவு திட்டம் இவ்வளவு குறைந்த நேரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு கூடிய பாராளு மன்றம் மதியம் 12.30 மணிக்கு

15



## பிரியந்த குமாரவின் உடலம் நேற்று இலங்கை வந்தது!

கொழும்பு, டிசெ. 07

பாகிஸ்தானின் கும்பலால் அடித்துக்கொலை செய்யப்பட்ட இலங்கையரின் எஞ்சிய உடல் பாகம் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

பாகிஸ்தானிலிருந்து பேழையில் வைக்கப்பட்ட அவரின் எஞ்சிய உடல் நேற்று மாலை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மூலம் இலங்கை வந்தது.

பாகிஸ்தானில் மத நிந்தனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் தீவிர இஸ்லாமிய கும்பலால் பிரியந்த குமார என்ற இலங்கையர் கடந்த

15

## சபாநாயகரை தாக்குவதற்கு எவருக்கும் இடமளியோம்!

### அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ

கொழுப்பு, டிசெ. 07

நாங்கள் இருக்கும் வரையில் சபாநாயகர்மீது தாக்குதல் நடத்துவதற்கு எவருக்கும் இடமளிக்க மாட்டோம் என்று ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, ஒழுங்குப் பிரச்னையை முன்வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சபாநாயகரின் கட்டளைகளை இந்த பாராளுமன்றத்தில் அமைக்க வேண்டும்.

15

## நோய்நிலை குழந்தைகளுக்கு சிறப்பு ஒப்புதலுடன் தடுப்பூசி!

கொழும்பு, டிசெ. 07

நாள்பட்ட நோய்கள், பல்வேறு சிக்கல்கள் உள்ள சிறுவர்களுக்கும் கைக் குழந்தைகளுக்கும் கோவிட் - 19 தடுப்பூசிகளை சிறப்பு ஒப்புதலுடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று மருத்துவ தொழில்நுட்ப சேவைகளின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

“எந்தவொரு கோவிட் -19

15

## அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்டன

### பாராளுமன்ற வரலாற்றில் முதல் சம்பவம்

கொழும்பு, டிசெ. 07

எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பால் இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக வரவு - செலவுத் திட்டத்தில் இரு அமைச்சுக்கள் மீதும் 5 இராஜாங்க அமைச்சுக்கள் மீதும் விவாதம் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் எதிர்க் கட்சிகள் இன்றியும் விவாதமின்றியுமே இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

வரவு - செலவுத் திட்ட விவாத சம்பிரதாயப்படி அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தை பிரதான எதிர்க் கட்சியின் சிரேஷ்ட எம்.பி. அல்லது பிரதான எதிர்க்கட்சியால் பெயர் குறிப்பிடப்படும் இன்னுமோர் எதிர்க்கட்சி

15

## கிராமப்புற மக்களுக்காக 2024இல் 71 ஆயிரம் வீடுகள்!

### பிரதமர் மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 07

குறைந்த வருமானமுடைய கிராமிய மக்களுக்காக 2024 ஆம் ஆண்டளவில் 71,110 வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தி உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது பிரதமர் மேலும் கூறுகையில், நாங்கள் தற்போது 21 நகர

15





# யாழ்ப்பாணத்தில் இருவருக்கு ரூ. ஒரு கோடி அதிர்ஷ்ட இலாபம்!

யாழ்ப்பாணம், டிசெ. 07

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண ஆளுநரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

மஹஜன சம்பத சீட்டிழுப்பில் ஒருவருக்கு ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாயும், மெகா பவர் வெற்றிச் சீட்டிழுப்பில் ஒருவருக்கு ஒரு கோடி ரூபாயும் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளன.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கூப்பனை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளர், பிராந்திய முகாமையாளர், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## வடமராட்சியில் கரையொதுங்கிய சாரதி பத்திரத்துக்கு உரிய நபர் தமிழகத்தில் உயிருடன் உள்ளார்!

சென்னை, டிசெ. 07

வடமராட்சி கிழக்கு கரையொதுங்கிய இந்திய சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு உரிய நபர் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், அவர் உயிருடனே உள்ளார் என்றும் அறிய வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக கடற்கரையில் சடலங்கள் கரையொதுங்கிய நிலையில், இந்தியப் பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப் பத்திரம் நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியது. இதையடுத்து பரபரப்பு நிலவியது.

கரையொதுங்கிய சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு உரிய நபர் தமிழ்நாடு கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனந்தகுமார் பரமசிவம் என்பவருடையதாகும். இந்த அனுமதிப் பத்திரத்துக்கு உரிய நபர் உயிருடனேயே உள்ளார் என்றும், அண்மையில் அந்தப் பகுதியில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் குறித்த நபரின் சாரதி அனுமதிப் பத்திரம் அடித்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பில் அவர் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தமையும் தெரியவருகின்றது. (ஐ)



# 100,000 பனை விதைகள் நடுகை அம்பாறையிலும் ஆரம்பமானது!

அக்கரைப்பற்று, டிசெ. 07

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு இலட்சம் பனை மரங்கள் உருவாக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பல பிரதேசங்களில் பனை விதைகள் நடும் செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் புஷ்பராஜ் துஷானந்தன் தலைமையில் இன்றைய தினம் பாண்டிருப்பு பிரதேசத்தில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்குப் பின்னுள்ள வீதி அருகாமையில் பனை விதைகள் நடும் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயல்திட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் த. அதிசயராஜ், பனை அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் த. விஜயன் மற்றும் பாண்டிருப்பு மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பனை விதைகளை மாணவர்களுக்கு வழங்கி வைத்ததுடன், நடும் செயல்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொரோனாவுக்கு கிளிநொச்சியில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 07

கொரோனா தொற்றால் நேற்று கிளிநொச்சியில் ஒருவர் மரணமானார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊடாக கிளிநொச்சி பொது மருத்துவமனை வழங்கிய இறந்த நபரின் மாதிரிகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக யாழ். போதனா மருத்துவமனையின் பி. சி. ஆர். அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணமானவர் ரஹமுதுல்லா (வயது 63) என்பவராவார் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## வடக்கில் நேற்று 7 தொற்றாளர்கள்



யாழ்ப்பாணம், டிசெ. 07

வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூட அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியானது.

நேற்றைய தினம் ஆய்வுகூடத்தில் 166 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், யாழ். போதனா மருத்துவமனையில் ஒருவருக்கும் என யாழ். மாவட்டத்தில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் இருவருக்கும், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## சான்றிதழ் வழங்கல்

மானிப்பாய், டிசெ. 07

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் இணையத்தின் ஊடாக மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறி கல்வி பயின்ற 100 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக இணையத்தின் தலைவர் எஸ். யுகேந்திரா அறிவித்துள்ளார்.

இணையவழி ஊடாக இடம்பெற்ற இலவச மனித உரிமைகள் கற்கை நெறியில் மலையகம், கிழக்கு மற்றும் வட மாகாண மாணவர்கள் 170இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இதில், முழுமையாகவும் சிறப்பாகவும் சகல வழிச் செயல்பாடுகளிலும் இணைந்த 100 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (ஐ-5)

## கல்வி tv CHANNEL-1

07.12.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சுத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சுத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி tv CHANNEL - 2

07.12.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
07.12.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## தமிழர் அரசியல் எதை நோக்கி?

நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் - இந்திய பிரதமருடனான சந்திப்பை சம்பந்தன் அற்ப காரணங்களுக்காக பிற்போட்டமை தொடர்பில் சில விடயங்களை விவாதித்திருந்தோம். விவாதங்களுக்கும் மாற்றுக்கருத்துக்களுக்கும் அப்பால் - 2009இற்கு முன்னர், தமிழர் அரசியல் எதை நோக்கிப் பயணிக்கின்றது என்பதை ஒரு சாதாரண தமிழ் குடிமகனால்கூட, விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த அரசியல் இலக்கு வெற்றி கொள்ளப்படாவிட்டாலும்கூட, இலக்கை விளங்கிக் கொள்வதில் எவருக்குமே குழப்பங்கள் இருந்திருக்கவில்லை.

ஆனால், 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலின் இலக்கு குழப்பங்கள் நிறைந்ததாகவே இருக்கின்றது. எங்கே செல்கின்றோம் என்பதில் எந்தவோர் அரசியல் தலைவரிடமும் தெளிவிருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் பேச்சுவழக்கில் ஒரு சொற்றொடருண்டு. அதாவது, அகப்பட்ட மாட்டுக்கு குறிசுடுதல், என்பார்கள். தமிழ் அரசியல் சூழலும் கிட்டத்தட்ட அப்படியான ஒன்றுதான். கூடுகின்ற இடத்தில் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக பேசிவிட்டுச் செல்லும் நிலையில்தான் தமிழ் அசியல் தலைவர்கள் இருக்கின்றனர். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோருவது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன. அந்த அடிப்படையிலேயே அவர்களின் யாழ்ப்பாண சந்திப்பும் இடம்பெற்றிருந்தது. ஆனால், இந்த நிலைப்பாட்டை தமிழ் அரசு கட்சி நிராகரித்திருந்தது.

இந்த நிலையில், கூட்டமைப்பின் சார்பில் சர்வதேச விவகாரங்களை கையாண்டுவரும், எம். ஏ. சுமந்திரனோ பிறிதொன்றை கூறுகின்றார். அதாவது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில், அமெரிக்காவும் இந்தியாவும் சேர்ந்து செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், அந்த அடிபபடையிலேயே தங்களின் அமெரிக்க பயணம் இடம்பெற்றதாகவும் கூறுகின்றார். சுமந்திரன் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கின்ற நிலையில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இந்திய பிரதமருடனான சந்திப்பைப் பிற்போட்டுவிட்டு அதற்கு நகைச்சுவைக்குரிய காரணங்களைக் கூறுகின்றார். சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பில் தங்களுடன் கலந்துரையாடப்படவில்லை என்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர். இதேபோன்றுதான் அமெரிக்க பயணம் தொடர்பிலும் பங்காளிக் கட்சிகளுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. இது இவ்வாறென்றால் - தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களோ - எதுவுமே தெரியாமல் பிறிதொரு பக்கம் அகப்பட்டதை பேசிக் கொண்டிருக்கின்றனர்.

கூட்டமைப்பின் நிலைமை இதுவென்றால் கூட்டமைப்பிற்கு எதிர் நிலையிலிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவை - அவர்களுக்கு அகப்பட்டதை பேசிக் கொண்டிருக்கின்றனர். கூட்டமைப்புக்குள் இடம்பெறும் விடயங்கள் அவர்களின் உள் பிரச்னையென்னும் புரிதலே அவர்களை ஆட்கொண்டிருக்கின்றது. ஆனால், சர்வதேச உறவுகள் தொடர்பான பிரச்னைகளை வெறுமனே கூட்டமைப்பின் - சம்பந்தனின் பிரச்னையென்று குறுக்கிக்கொள்ளக் கூடாது.

தமிழர் தரப்புக்கள் இவ்வாறு உள் - அடிபிடிகளிலும், அறிக்கைகளிலும் சுகம் கண்டுகொண்டிருக்கின்றபோது - மறுபுறமோ அரசாங்கம் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. போருக்கு பின்னரான, கடந்த பன்னிரெண்டு வருடங்களில், பத்து வருடங்கள் முழுவதுமாக சர்வதேச அழுத்தங்களுக்குள்தான் இருந்திருக்கின்றது. இவ்வாறான அழுத்தங்களுக்கு பின்னரும்கூட, அரசாங்கத்தின் அடிப்படையான அணுகுமுறைகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் இருக்கின்ற மாகாண சபை முறைமைகூட. தொடர்ந்தும் இருக்குமா என்னும் ஆபத்தான அரசியல் சூழலொன்று உருவாகியிருக்கின்றது. ஆனால், இவ்வாறான நிலையில்கூட, தமிழ் அரசியல் தலைமைகளால் கருத்தொருமித்து, கூட்டு அரசியல் வேலைத் திட்டம் தொடர்பில் சிந்திக்க முடியவில்லை. தலைமைகள் தெளிவற்றிருப்பதால் - தொண்டர்களும் தெளிவற்றிருக்கின்றனர் - இறுதியில் தாங்கள் எங்கோ கொண்டு செல்லப்படுகின்றோம் என்பதை அறியமுடியாதவர்களாக - மக்கள்! இந்த நிலைமையில் இனியாவது மாற்றம் ஏற்படுமா? அரசியல்வாதிகளிலிருந்து மாற்றங்கள் ஏற்படுவதற்கான நிலைமையை அவதானிக்க முடியவில்லை. மக்கள் மத்தியிலிருந்துதான் ஒரு புதிய எழுச்சி உருவாக வேண்டும். அது புதியதொரு மாற்றத்திற்கான அடித்தளமாகலாம்!

# மெய்சிலிர்க்க வைக்கும் சியால்கொட் பயங்கரம்!

அலசுவது இராஜதந்திரி

*இலங்கையர்களுக்கு பாகிஸ்தான் நினைவில் நிலைத்த ஒரு நாடாகவே இருக்கின்றது. ஏனெனில், 1996ஈம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வென்று இலங்கை அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றது பாகிஸ்தானில் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதுதவிர, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இலங்கையர்களுக்கு நன்கு பரிச்சயமான ஒரு கிரிக்கெட் வீரராக இருப்பதோடு அவரின் ஆட்டத்தையும் வேற்று நாட்டின் வீரராக இருந்தபோதிலும்கூட இலங்கையர்கள் வெகுவாக ரசிப்பதுண்டு.*

*இலங்கை மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது பாகிஸ்தான் இராணுவ ரீதியான பயிற்சிகளை இலங்கைக்கு வழங்கியிருந்தது. அத்துடன், மிக நெருக்கமான இராணுவ ரீதியான உறவுகளை இலங்கையும், பாகிஸ்தானும் கொண்டிருந்தன. இத்தகைய பின்னணியில் பாகிஸ்தானில் பணியாற்றி வந்த பொறியியலாளர் பிரியந்த குமார மிக மோசமான முறையில் அடித்தும், பின்னர் வீதியில் போட்டு தீயிட்டும் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்வலைகளை இலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.*

*இதன் வெளிப்பாடாக உணர்ச்சிவசப்பட்ட இலங்கையர்கள் சிலர் இரு தினங்களுக்கு முன்னரும் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தினுள் புகுந்து தமது ஆவேசத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.*

*பாகிஸ்தானில் பலியான இலங்கைப் பொறியியலாளர் பிரியந்த குமார தாம் பணியாற்றிய தொழிலகத்தில் சகல இடங்களிலும் காணப்பட்ட இஸ்லாமிய மத ரீதியான பிசுரங்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இதனால், ஆத்திரமுற்ற அந்தத் தொழிலகத்தின் சில இஸ்லாமிய அடிப்படைவாத ஊழியர்கள் அவரை அடித்துத் தாக்கி கொலை செய்ததோடு வெளியே கொண்டு வந்து வீதியில் போட்டு அவரின் உடலுக்கு தீயிட்டுள்ளனர்.*

*இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான ஆய்வாளர்கள் பாகிஸ்தானின் அயல் நாடான ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆட்சி பீடமேறியதன் பிரதி பலிப்பாகவும் இந்தச் சம்பவத்தை குறிப்பிட்டுள்ளனர்.*

*கடந்த ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் ஆட்சிக்கு வந்த தலிபான்களால் சர்வதேச பயங்கரவாதம் மேலும் பலமடையுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.*

*இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து வெளியிட்டபோது, “ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கர்கள் வெளியேறியமை ஆப்கானிஸ்தானிலும் அதனை அண்டிய நாடுகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகள், ஆயுத கலாசாரம் , போதைவஸ்து கடத்தல்கள் என்பவை மீளவும் பன்மடங்கு அதிகரிக்கும் சூழ்நிலைகளே பலமடையும்”, என்று தெரிவித்துள்ளார்.*

*இந்திய வெளியுறவு அமைச்சரின் கணிப்பை உறுதி செய்வது போலவே இலங்கைப் பொறியியலாளர் பிரியந்த குமார இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் விளங்குகின்றது.*

*இப்படுகொலை சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ளதுடன், இதுவரை இக்கோரச் சம்பவம் தொடர்பாக நூறுக்கும் அதிகமானவர்கள் கைதாகியிருப்பதாகவும் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். அத்துடன், பொறியியலாளர் பிரியந்த குமார எரியூட்டப்பட்டு கொல்லப்படுவதைத் தம்மால் முடியுமானவரை தடுக்க முயன்ற அவரோடு பணியாற்றிய பணியாளருக்கும் உயர் விருதொன்றை வழங்கி பிரதமர் இம்ரான்கான் அப்பணியாளரின் மனித நேயத்தை பாராட்டியுள்ளார்.*

*இந்தத் தருணத்தில் பாகிஸ்தானியர்கள் மத்தியில் மனித நேயம் கொண்டவர்கள் இருக்கவே செய்கின்றார்கள் என்பதற்கு 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணி பயங்கர துப்பாக்கித் தாக்குதலொன்றிலிருந்து காப்பாற்றப்பட்ட சம்பவம் விளங்குகின்றது.*

*இலங்கை அணியை லாகூரிலுள்ள கடாபி கிரிக்கெட் விளையாட்டரங்குக்கு மெஹெர் காலில் என்ற பஸ் வண்டிச்சாரதி ஏற்றிச்சென்றிருந்தார். அப்போது இலங்கை அணியினர் பயணித்த பஸ் வண்டிமீது சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.*


*அச்சமயம் தமது உயிரையம் துச்சமென மதித்து பஸ் சாரதி மெஹெர் காலில் இலங்கை அணியினரைக் காப்பாற்றியிருந்தார். இச்சம்பவத்தில் ஆறு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் காயப்பட்டனர். அத்துடன், ஆறு பாகிஸ்தான் பொலிஸ்காரர்கள் உட்பட எட்டு பாகிஸ்தானியர்கள் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.*

*இலங்கை அணியினரை காப்பாற்றிய பாகிஸ்தானிய பஸ் சாரதி மெஹெர் காலில் இலங்கைக்கும் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். காலமறிந்து அவர் மேற்கொண்ட துணிச்சலான நடவடிக்கையை கௌரவித்து இலங்கை சார்பாக 35 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் சன்மானமும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.*

*எனவே, பாகிஸ்தானில் இலங்கை பொறியியலாளர் பிரியந்த குமார கொல்லப்பட்ட சம்பவம் அங்குள்ள கொடூரமான பேர்வழிகளின் செயலை எடுத்துக்காட்டுகின்றது.*

*அதேசமயம் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை கிரிக்கெட் அணியினரை காப்பாற்றிய பாகிஸ்தானிய பஸ் சாரதி மெஹெர் காலில் அவரது உயரிய துணிச்சலான நடவடிக்கைக்காக நன்றியறிதலோடு இத்தருணத்தில் நினைவு கூரப்பட வேண்டியவராகவுமிருக்கின்றார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



டிசெம்பர் - 07 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 21
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
மேலதிகாரி கொடுத்த வேலையை செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை நிலவும். பரபரப்பான நாள். உழைப்புக்கு பலன். லாபகரமான ஆர்டர்கள் வரும்.

**இடபம்**
ஒருவருடைய வழி நடத்துதலால் வாழ்க்கையில் உயர்வீர்கள். தேவையற்ற மனஸ்தாபங்கள், வீண் பகைக்கு இடம் தர வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் வரும். உடல் ஆரோக்கியம் சிறக்கும்.

**மிதுனம்**
இதுவரை இருந்து வந்த பிரச்னை நீங்கும். மன அமைதி கூடும். பல தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். நட்பு வட்டம் விரியும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வேலை வாய்ப்பு உள்ளது.

**கடகம்**
குடும்ப உறவுகள் சுமுகமாகும். பேச்சால் பிறரை கவருவீர்கள். பணியிடத்தில் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். கவலையற்ற நாள். நஷ்டங்கள் குறையும். ஆதாயங்கள் உண்டு.

**சிம்மம்**
சகோதர உறவுகள் உங்களுக்கு கைகொடுக்கும். வெற்றி கூடுதலாகும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். குதூகலம் கூடும். இளம் வயதினருக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**
இழந்த மன தைரியம் கிடைத்துவிடும். முன்னேற்றமான நாள். குடும்ப உறவுகளின் அக்கறையும், அன்பும் உங்களை நெகிழ வைக்கும். அலுவலகத்தில் இருந்து வர வேண்டிய பணம் வரும்.

**துலாம்**
மன அமைதி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான மனநிலை நிலவும். கவலைகள் முடிவுக்கு வரும். மனதில் உற்சாகம் களைகட்டும். பேச்சில் கவனம் தேவை.

**விருட்சிகம்**
வீண் அலைச்சலை குறைத்துக் கொள்ளவும். யோகமான நாள். மென்மையான அணுகுமுறையால் மற்றவர்களைக் கவர்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வரும்.

**தனுசு**
உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்கு அலைச்சல் அதிகரிக்கும். மனதில் உற்சாகம் குறையாது. எதிலும் நிதானப்போக்கு இருந்த நிலை மாறி நிம்மதி வரும்.

**மகரம்**
வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திருவோணம்: நண்பர்களால் முன்னேற்றம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து வருமானம் வரும். உறவினர் உதவி செய்வர்.

**கும்பம்**
பேச்சில் நிதானம் அவசியம். பணியில் பரபரப்பு இருக்கும். குடும்பத்தினருடன் இணக்கமான சூழல் மலரும். நட்பு வட்டம் விரியும். குழந்தைகளால் ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் தீரும்.

**மீனம்**
வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு உருவாகும். மனக் குழப்பங்கள் நீங்கி வாழ்வில் நம்பிக்கை பிறக்கும். தேவையற்ற வாக்குறுதிகளை யாருக்கும் தர வேண்டாம்.

# அ.தி.மு.கவின் தலைமை பதவிகளுக்கு பன்னீர், எடப்பாடி போட்டியின்றி தெரிவு

சென்னை, டிசெ. -7

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமியும் போட்டியின்றி தேர்வாகின்றனர். இதன்மூலம் பொன்விழா ஆண்டில் இரட்டைத் தலைமையை அதிமுக உறுதி செய்துள்ளது.

கடந்த 1 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுவில், 'பொதுச் செயலாளர் பதவிக்குபதிலாக இனி ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் இருக்கும். பொதுச் செயலாளரை போல இப்பதவிகளுக்கும் அ.தி.மு.க. தொண்டர்கள் நேரடி யாக வாக்களித்து தேர்ந்தெடுப்பார்கள். டீசெம்பர் 7 ஆம் திகதி தேர்தல் நடக்கும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு ஓபிஎஸ்ஸும், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பழனிசாமியும் 4ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அவர்களது வெற்றியும் உறுதியாகிவிட்டது.

பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள அதிமுகவின் அதிகாரம் மிக்க இரட்டைத் தலைவர்களாக ஓபிஎஸ் - இபிஎஸ் தேர்வாகின்றனர். தமிழகத்தை அதிக ஆண்டுகள், அதாவது 30ஆண்டுகள் ஆட்சி செய்த கட்சியாக, இப்போதும் 65 எம். எல். ஏக்களுடன் வலுவான எதிர்க்கட்சியாக உள்ள அ.தி.மு.க, இரட்டைத் தலைமையை உறுதி செய்திருக்கிறது.

நாட்டில் எந்த கட்சியிலும் இரட்டைத் தலைமை இல்லாத நிலையில் அதிமுகவின் இந்த மாற்றம், தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்திய அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஆட்சியில் இருந்தபோது ஓபிஎஸ் - இபிஎஸ் இரட்டைத் தலைமை வெற்றிகரமாக செயல்பட்டது. எதிர்க்கட்சியாக இருக்கும் நிலையில் ஆளும் தி.மு.கவையும், சசிகலா - டிடிவி தினகரனையும் எதிர்கொண்டு இனி அவர்கள்எவ்வாறு செயல்பட உள்ளனர் என்பதை பொருத்தே அதிமுகவின் எதிர்காலம் அமையும்!

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு ஓபிஎஸ் - இபிஎஸ் தவிர வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. அதனால், இவர்கள் இருவரும் தேர்வு செய்யப்படுவது உறுதியாகியது. இந்நிலையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி. மு.க. தலைமை அலுவலகத்தில் தேர்தல் அதிகாரிகளான பொன்னையன், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் வேட்புமனுக்களை நேற்று பரிசீலனை செய்தனர்.

# கருத்து வேறுபாடுகளை விடுத்து தேர்தலில் ம.நீ.ம. வெற்றிபெறுவதற்கு உழைக்கவும்

## தொண்டர்களுக்கு கமல்ஹாசன் வேண்டுகோள்

சென்னை, டிசெ. 07

நடக்கவிருக்கும் நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சி தேர்தல்களில் களத்தில் இறங்கி வெற்றி காண வேண்டும் என மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். கருத்து வேறுபாடுகளை எல்லாம் ஓரம்கட்டி வைத்துவிட்டு வேலையைப் பார்க்குமாறு தொண்டர்களிடம் அவர் வேண்டியுள்ளார்.

கெரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த கமல்ஹாசன் அண்மையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார். இந்நிலையில் அவர் ஒரு வீடியோவை நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் அவர், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னெச்சரிக்கையுடன் எப்படி எதிர்கொள்வது என்று தொண்டர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

“உள்ளாட்சியில் சுயாட்சிக்காக குரல்கொடுத்துக் கொண்டிருக்கும் நம் மய்யம், கிராம சபையை பெரிதாக மக்களிடத்தில் கொண்டு சேர்த்த ஒரு சக்தி என்றால் மிகையாகாது. அது மட்டுமே நம் அடையாளமாக இருந்துவிடாமல், நடக்கவிருக்கும் நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சி தேர்தல்களில் நாம் எதற்காக குரல் கொடுத்தோமோ, அதே களத்தில் இறங்கி வெற்றியும் காண வேண்டும்.

உங்கள் நடுவிலிருக்கும் கருத்து வேறுபாடுகளை எல்லாம் ஓரம்கட்டி வைத்துவிட்டு வேலையைப் பாருங்கள். நீங்கள் இந்தத் தேர்தல் பணிகளில் ஈடுபடும்போது எல்லா விதமான ஆயத்தங்களும், அதாவது இந்தத் தொற்றுக்கு எதிரான தற்காப்புகளை நீங்கள் மேற்கொண்டே ஆக வேண்டும். இந்த தொற்று நீங்கிவிட்டது அல்லது போய்விடும் என்ற நம்பிக்கையில் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது என்பதற்கான முன்னுதாரணமாக நானே இங்கு நின்றுகொண்டிருக்கிறேன்.

நம்முடைய பலம், நம் தொண்டர்கள் தான். அவர்கள் ஆரோக்கியம் எனக்கு மிகவும் முக்கியமாகும். இந்தத் தேர்தல் வெற்றியை ஈட்டுவதற்கு உழைப்பு மட்டுமல்ல, முன்ஜாக்கிரதையும், தற்காப்பும் மிகவும் அவசியம். அதை செய்துகாட்டுவீர்கள் என்று நான் நம்புகிறேன்” என கமல்ஹாசன் இந்த காணொலியில் கூறியுள்ளார்.

# உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட தயங்கும் விஜயகாந்தின் தே.மு.தி.க.

## தொடர் தோல்விகளால் பெரும் பின்னடைவு

சென்னை, டிசெ. 07

தேர்தல்களில் தேமுதிக தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வருவதால், விரைவில் நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அக்கட்சியினர் போட்டியிடத் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

அடுத்தடுத்த தேர்தல்களில் தேமுதிக தோல்வியைத் தழுவியதால், 2009இல் 10.3 சதவீதமாக இருந்த தேமுதிகவின் வாக்கு விகிதம் படிப்படியாகக் குறைந்து, தற்போது ஒரு சதவீதத்துக்கு கீழ் சென்றுவிட்டது.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது, கடைசி நேரத்தில் அதிமுக கூட்டணியில் இருந்து தேமுதிக விலகியது. பின்னர், அமமுகவுடன் கூட்டணி அமைத்து, 60 இடங்களில் போட்டியிட்டது. தேர்தல் நெருங்கும் நேரத்தில் விஜயகாந்த் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஆனாலும், அந்த தேர்தலில் தேமுதிக ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. அண்மையில் 9 மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தேமுதிக, பெரிய அளவில் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில், தமிழகத்தில் விரைவில் நடைபெற உள்ள நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் தேமுதிக தனித்துப் போட்டியிட உள்ளது. இருப்பினும், அக்கட்சியினர் இத்தேர்தலில் போட்டியிட பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை.

இதுகுறித்து தேமுதிக மாவட்டச் செயலர்கள் சிலர் கூறும்போது, “முன்பெல்லாம், தேமுதிக சார்பில் போட்டியிட கடும் போட்டி இருக்கும். சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களில் தேமுதிக தோல்வியடைந்துள்ளதால், வரும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட கட்சியினர் தயக்கம் காட்டுகின்றனர். இந்த நிலையை மாற்றி, கட்சியைவளர்ச்சிப் பாதைக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்பதே தொண்டர்களின் விருப்பம்” என்றனர்.



# எதிர்க்கட்சி எம். பிக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 07

பாராளுமன்றத்துக்குள் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாராளுமன்ற சபை அமர்வுகளை புறக்கணித்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# பிரியந்தவை காக்க தனித்து போராடிய பாகிஸ்தான் பிரஜைக்கு உயரிய விருது!

இஸ்லாமாபாத், டிசெ. 07

பாகிஸ்தானின் சியல் கோட்டில் உள்ள கைத் தொழிற்சாலையில் பொது முகாமையாளராக கடமையாற்றி இலங்கையரான பிரியந்த கொடூரமாக தாக்கப்பட்ட சந்தரப்பத்தில் அவரை காப்பாற்றுவ தற்கு தனி நபராக போராடிய பாகிஸ்னியருக்கு பாகிஸ்தா னின் உயரிய விருது வழங்க உள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத அடிப்படைவாதிகளினால் பிரியந்த குமார தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரை காப்பாற்று வதற்கு மலிக் அதான் மாத்திரம் போராடியிருந்தார்.

அவரது மனிதாபிமான செயலானது முழு பாகிஸ்தானுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்த நாட்டு பிரதமர் இம்ரான் கான் தமது டுவிட்டர் கணக்கில் பதிவிட் டுள்ளார்.




குறித்த நபரின் மனிதாபிமான செயலை பாராட்டி ‘தம்ஹா ஐ சுஜாத்’ என்ற அதி யுயர் விருதினையும் வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# எம்.பிக்களின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்துங்கள்!

## வடிவேல் சுரேஷ் எம். பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

**“அதிஉயர் சபையாகக் கருதப்படுகின்ற பாராளுமன்றத்திலேயே எதிரணி எம். பிக்களுக்கு பாதுகாப்பு இல்லை.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வடிவேல் சுரேஷ் சுட்டிக்காட்டினார்.**

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

“சபாநாயகர் என்பவர் பக்கச்சார்பற்ற வகையில் செயல்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது அவரின் பொறுப்பாகும்.

ஆனால், எமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் சபை அமர்வை புறக்கணித்துள்ளோம். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.” - என்றார் வடிவேல் சுரேஷ்.(அ)



# தோட்ட தொழிலாளர் கொடுப்பனவுக்காக கொழும்பில் காணியை விற்கவுள்ள அரசு!

கொழும்பு, டிசெ. 07

தோட்டத் தொழிலாளர்களுக்குச் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்காக கொழும்பிலுள்ள காணி ஒன்றை விற்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் புனரமைக்கப்பட்ட நாவலப்பிட்டி - கலபொட வீதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ஆண்டுகளாக ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைக் கால கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் அதற்கான கொடுப்பனவுகளை வழங்குவேன். இந்தக் கொடுப்பனவுகளுக்கு நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பில் உள்ள காணி ஒன்றை விற்பதற்கு நான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன்.

தோட்டத் தொழிலாளர்கள் பல வருடங்களாக இந்த கொடுப்பனவுகள் இன்றி தோட்டங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்தக் கொடுப்பனவுகளைச் செய்ய முடியாவிட்டால் நமக்கு ஏன் அரசாங்கம் தேவை? நான் தமிழ் சமூகத்திற்காக உழைக்க விரும்புகிறேன்-என் றார். (அ)

# களுகமுவை பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒருவர் பலி!

## தாயும் குழந்தையும் மாயம்!!

கொழும்பு, டிசெ. 06

களுகமுவை பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் நீராட சென்ற ஐவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

இவர்களுள் ஒருவர் உயிரிழந்ததுடன் 20 வயதுடைய பெண்ணும் 2 வயதுக் குழந் தையும் காணாமல்போயுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளுமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து ஆண் ஒருவரையும் சிறுவன் ஒருவரையும் மீட்டு கம்பளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

உயிரிழந்தவர் கண்டி, மாபானாவதுர பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

காணாமல் போனவர்களைக் தேடும் பணியை பொலிஸ் உயிர் காக்கும் படையினர், கடற்படையினர் மற்றும் பிர தேசவாசிகள் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மோட்டார் சைக்கிளை இழுத்து விழுத்திய டிப்பர்

## பரந்தன் பகுதியில் இருவர் படுகாயம்

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் சிக்கிய இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து பரந்தன் ஊடாக பூநகரிக்குத் திரும்பு பிரதான சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளை முந்த முற்பட்ட டிப்பரின் ஒரு பகுதி மோட்டார் சைக்கிளின் கைபிடிப் பகுதியில் கொழுவி இழுத்ததால் அதில் பயணித்த இருவர் நிலை தடுமாறி கீழே விழுந்தனர்.

இதன்போது பலத்த காயம் அடைந்த இருவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (அ)

# பிரியந்தவின் கொலை பொதுவான விடயம்!

## பாக். பாதுகாப்பு அமைச்சர் பரபரப்பு பேட்டி

இஸ்லாமாபாத், டிசெ. 07

சியால்கொட்டில் இலங்கை பிரஜை பிரியந்தகுமார தியவதனவை, தெய்வ நிந்தனை என்ற பெயரில் உயிருடன் கொன்ற சம்பவம் குறித்து பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டக் கருத்து வெளியிட்டுள்ளார்.

“இஸ்லாத்தில் அந்த இளைஞர்கள் ஆர்வம் கொண்டவர்கள். இஸ்லாம் என்ற கோஷம் எழுப்பப்பட்டதால், இந்த இளைஞர்கள் உற்சாகமடைந்தனர். இந்தக் கொலை மூலம் பாகிஸ்தான் அழிவை நோக்கிச் செல்கிறது என்று அர்த்த



மில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் கருத்து உள்ளது. பிரியந்த குமார தியவதனவை கும்பல் கொடூரமாகக் கொன்றது மிகவும் பொதுவான விடயம்” என்று குறிப்பிட்டார் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர். (அ)

# இலங்கையரை கொடூரமாக கொன்று எரித்த கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை

## பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உறுதி

கொழும்பு, டிசெ. 07

பாகிஸ்தானில் கைத்தொழிற்சாலையில் தொழில் புரிந்து கொண்டிருந்த இலங்கைத் தொழிலாளரான பிரியந்த குமார என்பவர் கொடூரமாகக் கொலை செய்யப்படுவதற்குக் காரணமான அனைத்துக் குற்றவாளிகளுக்கும் எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட பாகிஸ்தான் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் நம்பிக்கை என்பன ஒருபோதும் பாதிப்படைய இடமளிக்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிட் டார்.

இச்செயலுடன் தொடர்புடைய அனைத்து வீடியோக் காட்சிகள் மற்றும் தகவல்கள், தற்போது பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 113 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது என்றும், பாகிஸ்தான் பிரதமர் குறிப் பிட்டார்.

நீண்டகாலமாகப் பாக்கிஸ்தானில் தொழில்புரிந்த இலங்கையரான பிரியந்த குமார, ஒரு முகாமையாளராக உயர் தொழில் திறமையைக் காட்டியவர் என்றும் ஜனாதிபதியிடம் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தார்.

குற்றவாளிகளுக்கு கடவுளின் மன்னிப்பு இல்லை என்றும் சட்டத்திலும் அவர்களுக்கு மன்னிப்பு கிடைக்காதென்றும் தெரிவித்த பிரதமர், நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும், இலங்கை அரசாங்கமும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

### மத்திய வங்கி மோசடி:

## 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து ரவி கருணாநாயக்க விடுதலை

கொழும்பு, டிசெ. 07

2016 மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கல் மோசடி தொடர்பான வழக்கில் 22 குற்றச்சாட்டுக்களில் 11 இல் முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்க உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற விசேட தீர்ப்பாயம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

## அரச சொத்துக்களை வேகமாக விற்பனை செய்கின்றது அரசு!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

அரச காணிகளையோ அரச சொத்துக்களையோ ஒரு அங்குலத்தைக்கூட விற்கமாட்டோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், அரச வளங்களை அதிவேகமாக விற்பனை செய்வதாக ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க, நாளாந்த பொருளாதார வீழ்ச்சியுடன் அரச சொத்துக்களை விற்பனை செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளமை புலனாகின்றது என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகாவலி வலயம் மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள விவசாய சமூகங்கள் உரத் தட்டுப்பாடு காரணமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

உர நெருக்கடியானது பெரும் போகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். தவறான கொள்கைகளினால் அரசாங்கம் தனது பொறுப்புகளில் தோல்வியடைந்துள்ளது. எமது அணி தலைமையிலான எதிர்கால அரசாங்கத்தின் கீழ் உரத்தை இலவசமாக வழங்குவோம்- என்றார். (அ)

## இஸ்லாமியரின் தீவிரவாதம் காட்டுமிராண்டித்தனமானது

### சொல்கிறார் ஞானசார தேரர்



கொழும்பு, டிசெ. 07

இஸ்லாமிய தீவிரவாதம் தற்போது உலகில் உள்ள வேறு எந்த வகை தீவிரவாதத்தையும் விட பயங்கரமானதாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் மாறியுள்ளது என ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானின் சியல்கோட் பகுதியில் பிரியந்த குமார ஒரு கும்பலால் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவத்தை கொண்டு இலங்கையில் வளர்ந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத தீவிரவாதம் மட்டுமல்ல, எந்த வகையான தீவிரவாதத்தின் விளைவுகளும் பேரழிவை ஏற்படுத்தும். ஆனால் இஸ்லாமிய தீவிரவாதம் அனைத்தையும் விட கொடூரமானதும் காட்டுமிராண்டித் தனமானதுமாக மாறியுள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், அறிவு, கலாசாரம், நாகரீகம், கலை, தத்துவம் உள்ளிட்ட பல நூற்றாண்டுகளாக மனிதனின் அனைத்து சாதனைகளின் மதிப்புகளையும் இது இடைவிடாமல் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

ஆகவே தற்போது உலகை ஆட்டிப்படைத்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இலங்கையிலும் அதிகரித்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒடுக்கவேண்டும்-என்றார். (அ)

# நான் உட்பட அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற மக்களை சுரண்டியுள்ளோம்

### மனம் திறக்கிறார் டலஸ் அழகப்பெரும



**கொழும்பு, டிசெ.7**

**தாம் உள்பட இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை சுரண்டினோம் என்று ஊடக அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.**

இந்த செயல்பாட்டை நிறுத்தாமல் அரசியல்வாதிகளால் முன்னோக்கிச் செல்ல முடியாது எனவும், தற்போதைய அரசு இதனை நிறுத்துவதற்கு அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் இலங்கைக் குடிமகன் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பிலும் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

இந்தச் சம்பவத்துக்கு மத தீவிரவாதிகளின் குழு பொறுப்பேற்பதால் அனைத்து பாகிஸ்தான் குடிமக்களுக்கும் எதிராக வெறுப்புணர்வை தூண்டவேண்டாம் என்று அமைச்சர் அழகப்பெரும இலங்கையர்களிடம் கேட்டுக்கொண்டார். (அ)

## புதிய அடையாளத்துடன் எரிவாயு விநியோகிப்பு

கொழும்பு, டிசெ. 07

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் சிலிண்டரை மீள நுகர்வோருக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் எரிவாயு சிலிண்டரில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய சிலிண்டர்கள் வால்வுகளில் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்துடன் கூடிய பொலித்தீன் பாதுகாப்பு உறை இடப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

3 நிபந்தனைகளின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

## 9 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூஸ்டர் பெற்றனர்

கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் கொரோனா தடுப்பூசியின் மூன்றாவது டோஸைப் பெற்று கொண்டவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 9 இலட்சத்து 56 ஆயிரத்து 946 பேர் கொரோனா தடுப்பூசியின் மூன்றாவது டோஸைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக நாட்டில் நேற்று முன்தினம் 19 ஆயிரத்து 633 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.



அதன்படி, நேற்று முன்தினம் 17 ஆயிரத்து 644 பேருக்கு பைசர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 868 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 220 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

அதேநேரம் 201 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 3 ஆயிரத்து 677 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அல்ரா சவுண்ட் ஸ்கான் இயந்திரம்!

### மக்கள் வங்கியினால் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 07

மக்கள் வங்கியினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 75 இலட்சம் பெறுமதியான அல்ரா சவுண்ட் ஸ்கான் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.



நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த இயந்திரம் வைத்திய சாலையிடம் கையளிக்கப்பட்டது.

மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்பில் ஏற்கனவே கொழும்பு போதனா வைத்தியசாலைக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் இந்த இயந்திரம் வழங்கப்பட்ட நிலையில் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் இவ் இயந்திரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜா உள்ளிட்ட மருத்துவர்கள், வங்கி அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

# முல்லைத்தீவு கடலில் காணாமல்போன ஏனைய இருவரும் சடலங்களாக மீட்பு!

முல்லைத்தீவு, டிசெ. 07

முல்லைத்தீவு கடலில் நீராடச் சென்று, நீரில் மூழ்கி காணாமல்போயிருந்த மூன்று இளைஞர்களும் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், ஏனைய இருவரின் சடலங்களை தேடும் நடவடிக்கை அப்பகுதி கடற்றொழிலாளர்கள், பொலிஸார் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர்களது சடலங்களும் நேற்று கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் குறித்த பகுதிக்கு யுவதி உள்ளிட்ட நான்கு பேர் வாகனத்தில் வந்து, அப்பகுதியிலுள்ள கடலில் குளித்த போது ஆண்கள் மூவரும் கடலில் மூழ்கிய சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

வவுனியா- மதகுவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய மனோகரன் தனுசன், தோணிக்கல் வவுனியாவை சேர்ந்த 26 வயதுடைய விஜய குமாரன் தர்சன், வவுனியா- மதவுவைச்சகுளத்தை சேர்ந்த 26 வயதுடைய சிவலிங்கம் சகிலன் ஆகியோரே கடலில் மூழ்கி உயிரிழந்தனர். (அ)




# மாதகலில் 275 கிலோ கஞ்சா கடற்படையினரால் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 07

மாதகல் கடலில் 7 மூடைகளில் மிதந்த 275 கிலோ கஞ்சா நேற்றுக் காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாகக் கருதப்படும் 7 மூடை கஞ்சா கடலில் மிதந்த சமயம் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இந்தியாவில் இருந்து படகில் கஞ்சாவைக் கடத்தி வந்தவர்கள் கடற்படையினரை கண்டதும் அதனைக் கடலில் வீசிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட 7 மூடைகளிலும் 275 கிலோ கஞ்சா காணப்பட்டுள்ளது.

இந்த 275 கஞ்சாவை கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்து சென்றனர். (அ)

## மனுஷ நாணயக்காரவை தாக்கிய

# ஆளுங்கட்சி எம்.பிக்கள் மீது உரிய நடவடிக்கை வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 07

**“பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்திய அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர், சபாநாயகரிடம் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

“பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும். அதற்கான உத்தரவாதத்தை அவர்



இன்னும் வழங்கவில்லை. சபாநாயகர் நடுநிலையாக செயல்பட வேண்டும். மனுஷ விவகாரத்தில் தற்போதைய சபாநாயகர் மௌனம் காக்கின்றார்.

மனுஷ நாணயக்காரமீது தாக்குதல் நடத்திய ஆளுங்கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சபைக்குள் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அரச வன்முறைக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.”-என்றார் சஜித் பிரேமதாஸ. (அ)

# இந்து சமுத்திர மாநாட்டில் இலங்கைக்கு பெருமை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 07

கோவிட் தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்திய முதல் 5 நாடுகளுக்குள் இலங்கையும் உள்ளடங்குவதாக இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டிருந்த பிராந்திய நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன. இது எமது நாட்டுக்கு பெருமையாகும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்



அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேபோன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் சுமார் 3 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும், அதற்கும் மேலதிகமாக மேலும் பல இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாவும் அமைச்சர் கூறினார்.

# சர்வதேச தரத்தில் ‘லாவ் காஸ்’

கொழும்பு, டிசெ. 07

தமது நிறுவனம் உயர்தரமான எரிவாயுத் தொழிற்சாலையையும் வர்த்தக நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக லாவ் காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையைப் போன்றே பங்களாதேஷ், மியன்மார், மாலைதீவு, இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கும் எரி பொருளை விநியோகிப்பதாகவும் லாவ் எரிவாயுவில் ஏதும் பிரச்னைகள் இருந்திருந்தால் அந்த நாடுகளில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது

ஆனால், அவ்வாறான முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் தமது நிறுவனம் கடந்த 25 வருடங்க ளாக சர்வதேச தரத்துக்கு அமைய வர்த்தக நட வடிக்க களை முன்னெடுத்து வருவதாகவும் அந்த நிறுவனத்தின் தலைவர் டப்ளியு.எச்.கே. வேஹப் பிட்டிய தெரிவித்துள்ளார்.

# கோவிட் தடுப்பூசி செலுத்தல் கட்டாயமாக்கப்படவேண்டும்

## சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 07

தடுப்பூசி வழங்கலைக் கட்டாயமாக்க வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, அதற்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கான பணிகளை துரிதப்படுத்துமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிபான ஒமைக்ரொன் நாட்டில் கண்டறியப்பட்டதை அடுத்து அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதேநேரம், கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின் அதுகுறித்து மிகுந்த அவதானம் செலுத்துமாறும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

# சில பகுதிகளில் தொடர்ந்தும் மின் தடைகள் ஏற்படக்கூடும்

கொழும்பு, டிசெ. 07

நுரைச்சோலை மின் நிலையத்தில் செயலிழந்திருந்த மின் பிறப்பாக்கிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதுவரை நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்தும் மின் சாரத் தடைகள் ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மையில் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம், ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இதனை இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட மின்வெட்டு வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்றாக இருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட மின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு துறைமுக அதிகார சபை அநாவசிய செலவு

## பொது துறைமுக ஊழியர் சங்கம் குற்றம்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

இலங்கை துறைமுக அதிகாரசபை காலிமுகத்திடலை பசுமையாக அபிவிருத்தி செய்வதற்காக 12.5 கோடி ரூபாவை செலவிடுவதாக அகில இலங்கை பொது துறைமுக ஊழியர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமல் பொதுமக்கள் சிரமப்பட்டு வரும் நிலையில் மீண்டும் பசுமைப் புல்வெளிகளை அமைக்க துறைமுக அதிகார சபையின் நிதி செலவிடப்படுவதாக அது குற்றம்சாட்டியுள்ளது.

அகில இலங்கை பொது துறைமுக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகனகே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு வெளிநாட்டு நாணய நெருக்கடியை எதிர்நோக்கும் வேளையில் துறைமுக அதிகாரசபை அரச நிதியில் பெருமளவிலான தொகையை செலவிடுவது பிரச்னைக்குரிய விடயமாகும்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதில் நாடு சிரமப்பட்டு வருகிறது. எனினும் காலி முகத்திடலை அழகுபடுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

மேலும் துறைமுக அதிகார சபையானது, காலி துறைமுகத்தின் சுற்றுலா பங்களாவில் கழிப்பறை வசதிகளை மேம் படுத்த ஒரு இலட்சத்து 58 ஆயிரம் ரூபாயை செலவிட்டுள்ளது.

வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதற்காக துறைமுகத் தொழிலாளர்கள் குறைந்த வளங்களுடன் பணிபுரியும் அதேவேளை, அதிகாரிகள் இந்த நிதியை அத்தியாவசியமற்ற திட்டங்களுக்கு தாராளமாகச் செலவழித்து வருகின்றனர்.

இதேவேளை, பெற்றோலியம், துறைமுகம் மற்றும் மின் சக்தி கைத்தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அரச வளங்களை விற்பனை செய்யும் அதிகாரிகளின் நடவடிக்கைக்கு எதிராக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு அகில இலங்கை பொதுத் துறைமுக ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது-என்றார். (அ)

# முதலீட்டு சபை உறுப்பினர்களின் இராஜிநாமாவை நிராகரித்த ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 07

இலங்கை முதலீட்டுச் சபையின் உறுப்பினர்கள் சிலரின் இராஜிநாமா கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பலரின் இராஜிநாமாவே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த உறுப்பினர்கள் கடந்த வாரம், தங்களது பதவிகளில் இருந்து இராஜினாமா செய்ய தீர்மானித்திருந்தனர்.

எவ்வாறாயினும், அவர்களின் சேவையை தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (அ)

பனங்காட்டான்

# புகலிட தமிழர்களின் பலமும் தாயக தலைமைகளின் பிளவும்

சிரித்திரன் என்ற பெயரில் இலங்கையில் வெளிவந்த சஞ்சிகை மிகவும் பிரசித்தமானது. அரசியல், சமூகம் சார்ந்த கருத்துகளை கேலிச்சித்திரமாகவும் கட்டுரைகளாகவும் தமிழில் வெளியிட்ட முதலாவது நகைச்சுவை இதழ் இது.

இதன் ஆசிரியராக சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்பட்ட சிவஞானசுந்தரம் கட்டட வரைகலைஞராக இருந்தபோதும், கருத்தோவியக் கலைஞராக மிளிர்ந்து சமூகத்தின் சீர்கேடுகளை வெளிக்கொணர்ந்தார். வாழும்போதே மாமனிதர் மகுடம் சூட்டப்பட்டு மதிப்பளிக்கப்பட்ட இவரின் கருத்தோவியம் ஒன்றின் வாசகம் பின்வருமாறு இருந்தது:

"கேள்வி - தூங்கிக் கிடக்கும் தமிழனை தட்டி எழுப்புவது யார்? பதில் - மெயில் ரெயில் அநுராதபுரத்தை அடையும்போது சிங்களவன்".

மெயில் ரெயில் என்பது இரவு நேரத்தில் யாழ்ப்பாணம் - கொழும்புச் சேவையில் ஈடுபடுவது. இதில் பயணிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் முழு ஆசனத்திலும் தூங்கி விடுவர். அவ்வளவுதான். இதனை புரிந்து கொள்ள நேரமெடுக்காது.

இப்போது தூங்கிக் கொண்டிருக்கும் தமிழரை சிங்கள ஆட்சியாளர்களே அடிக்கடி எழுப்பி விடுகிறார்கள். இதனை கோட்டாபய ஆட்சி மறவாது அவ்வப்போது செய்து வருகிறது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் உறைநிலைக்குச் சென்றபின்னர், தமிழரைத் தூங்கவிடாது மே 17, கறுப்பு யூலை, தியாகி திலீபன் நினைவுநாள், மாவீரர் நாள் போன்ற முக்கிய தினங்களில் சிங்கள தேசம் செயற்பட்டு வருகிறது. தமிழர் தாயகத்திலுள்ள காவற்துறையினரும் நீதிமன்றங்களும் இந்த நாட்களில் நினைவேந்தல்களைக் குழப்புவதற்கான முழுநேரப் பணியாளர்களாக அரச சம்பளத்தில் இயங்குகின்றனர்.

இந்த நாட்களுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே தமிழ்த் தேசிய அரசியலாளர்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு தடை விதிக்கப்படுகிறது. இது தவிர, மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்த இடங்கள், நினைவுத் தூபிகளிருந்த இடங்கள் முட்கம்பிகளால் சுற்றிவளைக்கப்பட்டு படையினரால் துப்பாக்கி சகிதம் காவல் புரியப்படுகிறது.

அதனையும் மீறி ஏற்றப்படும் நினைவுத் தீபங்களை காலால் உதைத்து மிதிப்பது, வணக்க மலர்களை அள்ளி வீசுவது, முன்னின்று செயற்படுபவர்களை கைது செய்வது போன்ற அத்துமீறல்களை பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் எதிர்ப்புகளையும் தடைகளையும் உடைத்து நினைவேந்தல்களை நிறைவேற்ற வேண்டுமென்ற மன உந்துதலும், ஓர்மமும் தமிழ் உணர்வாளர்களிடம் அதிகரித்து வருகிறது. கடந்த வாரத்து மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் அனந்தி சசிதரன், ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான வேலன் சுவாமிகள், சுகாஸ், காண்டீபன், பீற்றர் இளஞ்செழியன் போன்ற பெயர் குறிப்பிடக்கூடிய சிலர் பொது இடங்களிலும் தூபிகள் அமைந்த இடங்களிலும் அதீத துணிச்சலுடன் நினைவேந்தலை மேற்கொண்டமையை ஊடகங்கள் வாயிலாக காண முடிந்தது,

சில இடங்களில் படையினரின் ஆயுதங்களின் முனையில் நினைவேந்தல் இடம்பெற்றது. இவ்விடங்களில் ஆண்களும் பெண்களும் காட்டிய துணிச்சல் வியக்க வைப்பது. முதலாவது மாவீரர் சங்கரின் இல்லத்துக்கு மாவீரர் பண்டிதரின் தாயாரை அழைத்துச் சென்ற சிவாஜிலிங்கம், அங்கு தீபமேற்றிய வரலாற்று நிகழ்வு சர்வதேச ரீதியாக பதிவு பெற்றுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரனும், கலையரசனும் தங்கள் வீடுகளில் தீபமேற்றி நினைவேந்தலை நிறைவு செய்தனர். நாம் வாழும் இடங்களில் இறந்தவர்களை இதயங்களில் நினைவு கூர்ந்து விளக்கேற்றுவோம் என்ற தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜாவின் வேண்டுகோளை தமிழரசு எம்.பி.க்கள் அப்படியே நிறைவேற்றியுள்ளனர். மாவை சேனாதிராஜாவும், கட்சியின் துணைத்தலைவர் சி. வீ. கே.சிவஞானமும் கூட தங்கள் வீடுகளிலேயே தீபமேற்றினர்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் தீபமேற்றி சற்று வித்தியாசமாக நினைவேந்தலை ஒப்பேற்றினார். மன்னாரிலும் மட்டக்களப்பிலும் சற்று அடக்கமான நிலையில் நினைவேந்தல் இடம்பெற்றது. முன்னைய ஆண்டுகளைப் போன்று இவ்வருடம் கத்தோலிக்க குருமார்களின் பங்களிப்பு காணப்படவில்லை. நவம்பர் 20ஆம் திகதியை இறந்தோருக்கான பொதுவழிபாட்டு நாளாக அவர்கள் பிரகடனம் செய்ததால் உருவான கருத்து முரண்பாடு காரணமோ தெரியாது.



"ஒற்றுமை முயற்சிக்கு சித்தார்த்தனை தலைமை தாங்குமாறு மாவை சேனாதிராஜா விடுத்த வேண்டுகோளை வரவேற்றுள்ள ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் தலைமையில் இயங்குவதற்கு மாவையர் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக கூறினார்.



போரில் உயிர்நீத்த உறவினர்களை நினைவுகூருவதை அரசாங்கம் தொடர்ந்து நிறுத்தினால் பொதுமக்கள் மேலும் வீறுகொண்டு எழுவர் என்று அறைகூவிய ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அவரது சகாக்களும் அன்று காணாமற் போய்விட்டனர். தூதுவர்களைச் சந்திப்பதில் இப்போது இவர்களுக்கு நேரம் போகிறது.

தமிழ் அரசுக் கட்சியின் இரட்டையர்களென இந்நாட்களில் அடையாளம் காட்டிவரும் சுமந்திரனும் சாணக்கியனும் அமெரிக்கா, கனடா, பிரித்தானியாவுக்கான பயணங்களை மேற்கொண்டிருந்ததால் மாவீரர் நாளை மறந்து விட்டனர். விரும்பியிருந்தால் வெளிநாடுகளில் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டல்களின் அறைக்குள்ளாவது தீபமேற்றி, அவைகளை ஊடகங்களில் பதிவேற்றி புதுமை செய்திருக்கலாம். கனடாவில் கிடைத்த நிரந்தரமாக நினைவில் இடம்பெறும் "வரவேற்பு, மாவீரர் நாளை மறக்கடிக்கச் செய்துவிட்டது போலும். இவை போகட்டும். கூட்ட மைப்பின் தலைவரும், திருமலை மாவட்ட எம்.பியுமான சம்பந்தன் நினைவேந்தல் நாளன்று எங்கே போனார், என்ன செய்தார்? தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் ஊடகவிய லாளர் ஒருவர் இதுபற்றி வினவியபோது அவர் கூறிய பதில் பின்வருமாறு அமைந்தது:

"பாராளுமன்ற வரவு - செலவின் மீதான விவாதம் தற்போது இடம்பெறுவதால் ஐயா (சம்பந்தன்) கொழும்பு வீட்டில் தான் தங்கியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர் என்ற பதவி காரணமாக ராஜபக்ஷவினர் ஐயாவுக்கு அரச பங்களா (பெரிய வீடு) ஒன்றை இலவசமாக வழங்கியுள்ளனர். பல உபாதைகளுடனும் முதுமை காரணமாகவும் கஸ்டப்படும் ஐயாவுக்கு இந்த வீட்டில் வாழ்வது வசதி. அரசாங்கம் கொடுத்த வீட்டில் எவ்வாறு தீபமேற்றி நினைவேந்தல் செய்ய முடியம்?" என்று அந்தப் பதில் அமைந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தாலும் அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும்கூட கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் வரை அந்த வீட்டில் சம்பந்தன் தங்கலாம். எனவே, தி.மு.க தலைவர் பதவியில் கலைஞர் கருணாநிதி இருந்தது போன்று சம்பந்தனும் கூட்டமைப்பின் ஆயுட்கால தலைவராகவே இருப்பார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கம் வழங்கிய வீட்டை பக்குவமாக காத்துவரும் சம்பந்தன், தமது சொந்த வீடு (தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் வீடு) சீரழிந்து போவதை கண்டு கொள்ளவில்லையா? பங்காளிக் கட்சிகள் பிளவுண்டு பிரிந்து தனித்தனியாகச் செல்வதை தெரியாதிருக்கிறாரா? ஒருவரது தன்னிச்சையான போக்கால் கூட்டமைப்பு உடையுண்டு போவதை அறியாதுள்ளாரா?

ஒரேயொருபாராளுமன்ற உறுப்பினரோடு இருக்கும் சித்தார்த்தனும்கூட வழமைபோல மாவீரர் நாளை மறந்து விட்டார். ஆனால், அவரிடம் முக்கியமான பொறுப்பொன்றை மாவை சேனாதிராஜா வழங்கியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொதுநிகழ்வொன்றில் உரையாற்றும்போது பிரிந்து நிற்கும் தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் தகுதி சித்தார்த்தனுக்கே உண்டென்றும், அவரது தந்தையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் இவ்வாறான பணிகளை அக்காலத்தில் சிறப்பாக செய்தவரென்றும் கூறி, இப்போதுள்ள நிலையில் ஒற்றுமைப்படுத்தும் தலைமைப் பணியை சித்தார்த்தன் ஏற்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். இந்த வேண்டுகோளை நிராகரிக்காத சித்தார்த்தன், அனைத்துக் கட்சியினரும் இவ்விடயத்தில் பங்களிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து தமது பதிலுரையை நிகழ்த்தினார்.

ஒற்றுமை முயற்சிக்கு சித்தார்த்தனை தலைமை தாங்குமாறு மாவை சேனாதிராஜா விடுத்த வேண்டுகோளை வரவேற்றுள்ள ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் தலைமையில் இயங்குவதற்கு மாவையர் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக கூறினார்.

சில மாதங்களுக்கு முன்னர் ரெலோ முன்னெடுத்த ஒற்றுமை முயற்சியில் கலந்து கொண்ட மாவை சேனாதிராஜா, பின்னர் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டதை சுட்டும் வகையில் சிலேடையாக அமைந்தது செல்வம் அடைக்கலநாதனின் கருத்து.

மாவையரின் முயற்சி நிறைவேறுமோ இல்லையோ தமிழரசுக் கட்சிக்குள் இவ்விவகாரம் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரில் தமிழரசுக் கட்சியினர் ஆறு பேர். புளொட்டில் சித்தார்த்தன் மட்டுமே. இப்படியிருக்கையில் தமிழ் அரசின் தலைவராக இருக்கும் மாவையர் தலைமைப் பதவியை சித்தார்த்தனுக்கு வழங்குவதா? அப்படியானால் கூட்டமைப்பின் சம்பந்தனின் நிலைமை என்ன? அடுத்து தலைமைக் கதிரைக்கு எதிர்பார்த்திருக்கும் சுமந்திரனின் எதிர்காலம் என்ன?

சில வாரங்களுக்கு முன்னர் தொலைக்காட்சிச் செவ்வியொன்றில் தமிழரசுக் கட்சி பிரமுகர் சி. வீ. கே.சிவஞானம் மாவையர் பற்றிக் குறிப்பிடுகையில், அவர் ஏதோ குழப்பத்தில் இருக்கிறார் என்று கூறியது உண்மையா? அல்லது திட்டமிட்டு சில குழப்பங்களையும் பிரிவுகளையும் மாவையர் ஏற்படுத்துகிறாரா?

புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பல பிரிவுகளாக இருப்பதாக தாயகத் தலைமைகள் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. அதனைப் பொய்யாக்கி பாரிய தேசிய எழுச்சியாக புலம்பெயர் உறவுகள் மாவீரர் நினைவேந்தலை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்து தங்கள் ஒற்றுமையைப் புலப்படுத்தினர். புலம்பெயர் உறவுகளைக் குறைகூறும் தமிழ்த் தலைமைகள், ஆகக்குறைந்தது நினைவேந்தல்கள் போன்ற தேசியக் கடமைகளுக்காகவாவது பொதுநோக்கில் எப்போது இணையப் போகின்றனர்? ■



“இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமாகி வரும் தருணத்திலும், இந்த சந்திப்பு என்பது இருநாடுகளுக்கும் இடையில் இருக்கும் சிறப்பான, கேந்திரிய உறவை தக்கவைப்பதற்கு மட்டுமல்லாமல் அதை மேலும் ஆழமாக்குவதற்கும்தான் என்பதை புடின் சூசகமாக சுட்டிக் காட்டுகிறார்

**உபசனா பட்**

# இந்திய - ரஷ்ய உறவு பலமடைவதை அமெரிக்கா, சீனா விரும்பவில்லையா?

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் நேற்று இந்தியா வந்துள்ளார். இதனால், இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவு மேலும் வலுப் பெறும் என ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

பெருந்தொற்று தொடங்கிய பிறகு புடின் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு பயணம் இது.

ஆப்கானிஸ்தான் பிரச்னையில் இருநாட்டு உறவில் ஏற்பட்டிருந்த விரிசல் இந்த பயணத்தால் சரியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமாவதையும் ரஷ்யா விரும்பவில்லை. அதேபோன்று சீனா ரஷ்யாவின் கேந்திரிய கூட்டணி நாடு என்பதால், சீனா - இந்தியா எல்லை தொடர்பாகவும் எழும் பிரச்னைகள் குறித்தும் ரஷ்யா கவலை கொள்கிறது.

இராணுவ உபகரணங்களுக்கு இந்தியா ரஷ்யாவைதான் பெரிதும் நம்பியுள்ளது.

இந்த பயணத்தில் சில முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அது இந்தியாவின் செயல்திறனை மட்டுமல்ல இரு நாட்டு உறவையும் புதுப்பிக்கும்.

### இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்துதல்

கடந்த ஆண்டு நடைபெறவிருந்த இந்திய - ரஷ்ய உச்சி மாநாடு பெருந்தொற்று காரணமாக இரத்து செய்யப்பட்டது.

பெருந்தொற்றுக்கு பிறகு புடின் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு பயணம் இது. முதலாவது பயணம் ஜூன் மாதம் ஜெனிவாவிற்கு சென்று அமெரிக்க ஜனாதிபதி பைடனை சந்தித்தது. பெருந்தொற்று காரணமாக ஜி20 மாநாடு மற்றும் கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவநிலை மாநாடு ஆகியவற்றை தவித்துவிட்டார் புட்டின்.

அதேபோன்று சீனாவுக்கான பயணத் திட்டம் ஒன்றையும் மாற்றினார்.

“இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமாகி வரும் தருணத்திலும், இந்த சந்திப்பு என்பது இருநாடுகளுக்கும் இடையில் இருக்கும் சிறப்பான, கேந்திரிய உறவை தக்கவைப்பதற்கு மட்டுமல்லாமல் அதை மேலும் ஆழமாக்குவதற்கும்தான் என்பதை புட்டின் சூசகமாக சுட்டிக் காட்டுகிறார்” என டிசெம்பர் முதலாம் திகதி ரைம்ஸ் ஓவ் இந்தியா பத்திரிகையில் ஆய்வாளர் நந்தன் உன்னிகிருஷ்ணன் தெரிவித்திருந்தார்.

“பலதுருவ உலகின் அதிகாரமிக்க மையத்தில் ஒன்றாக இந்தியா உள்ளது. அதன் வெளியுறவு கொள்கை, தத்துவங்கள் மற்றும் கோட்பாடுகள் ரஷ்யாவுடன் ஒத்துபோகிறது,” என புடின் தெரிவித்திருந்தார்.


இந்தியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் முறையே ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சரிடம் பேச்சு நடத்துகின்றனர்.

இதுவரை இம்மாதிரியான பேச்சு வார்த்தையை இந்தியா அமெரிக்கா உட்பட வெகுசில நாடுகளிடம் மட்டுமே மேற்கொண்டுள்ளது.

### இராணுவ ஒத்துழைப்பு

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளும் கூட்டாக 7 இலட்சத்து 50 ஆயிரம் ரஷ்யாவில் வடிவமைக்கப்பட்ட ஏகே - 203 துப்பாக்கிகளை உருவாக்க கையெழுத்திடும் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று 2018ஆம் ஆண்டு 543 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பில் கையெழுத்தான ஒப்பந்தத்தின் படி S-400 Triumf வான் பாதுகாப்பு அமைப்பை ரஷ்யா இந்தியாவுக்கு வழங்குவது குறித்தும் இதில் பேசப்படும்.





ஆனால் இந்த S-400 அமைப்புகள் சீனாவிடம் ஏற்கனவே உள்ளது. இது முதன் முறையாக 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

இந்தியாவின் சில தேசியவாத ஊடகங்களான சீ நியூஸ் இதுகுறித்து சீனா வருத்தமாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

அதேபோன்று இந்தியா ரஷ்யாவுடனான ஆற்றல் கூட்டணியையும் விரிவாக்க திட்டமிட்டுள்ளது.

“ரஷ்யாவின் வளங்கள் மிகுந்த தொலைதூர கிழக்கு பகுதி குறித்து இந்தியா பல்வேறு திட்டங்களை வைத்துள்ளது. அதேபோன்று இந்திய பிரதமர் மோதி 2019ஆம் ஆண்டு வளாடிவோஸ்டோகிலிருந்து இந்தியாவின் கிழக்கு கொள்கை திட்டம் குறித்து அறிவிக்கும்போது, இந்த பகுதியில் 100 கோடி டொலர் மதிப்பிலான எல்லை கட்டுப்பாடு கோட்டு திட்டங்களை அறிவித்தார்” என எக்னாமிக்ஸ் ரைம்ஸ் பத்திரிகை டிசெம்பர் 2ஆம் திகதி தெரிவித்தது.

### ஆப்கானிஸ்தான் விஷயத்தில்

இந்தியா மற்றும் ரஷ்யாவுக்கு இடையேயான பேச்சு ஆப்கானிஸ்தான் குறித்து ஆலோசிக்கப்படும். ஆனால், அது அத்தனை எளிதானது அல்ல.

ஆப்கானிஸ்தான் குறித்த சந்திப்பிற்கு சீனா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவை அழைத்த ரஷ்யா இந்தியாவை அழைக்கவில்லை.

இதற்கு காரணம் தலிபான்கள் விஷயத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் ஒரே கொள்கையை கொண்டிருக்கவில்லை.

“ரஷ்யா, ஆப்கான் விஷயத்தில் பாகிஸ்தானுடன் இணைந்து செயல்படுகிறது.” என ரஷ்யாவின் அக்கடமி ஓவ் சயின்ஸஸை சேர்ந்த அலெக்சேய் சகோராவ் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவுடன் இந்தியாவின் உறவு வலுப்பெறும்போது ரஷ்யா பாகிஸ்தானுடனான உறவை வளர்த்தது.

நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தான் குறித்து இந்தியா ஒருங்கிணைத்த கூட்டம் ஒன்றில் ரஷ்யா கலந்து கொண்டது. இதனை ரஷ்ய பத்திரிகையான நசாவிசிமயா கசேடா டெல்லியுடன் ரஷ்யா ஒத்துப் போவதை காட்டுகிறது என தெரிவித்திருந்தது.

### அமெரிக்க - சீன உறவு

S-400 ஒப்பந்தத்தில் அமெரிக்கா தடை விதிக்கும் என்ற அச்சுறுத்தலையும் மீறி இந்தியா முன்னேறி செல்வது அமெரிக்காவுக்கு சங்கடமான ஒன்றுதான்.

இருப்பினும் புடினின் இந்த பயணம் நேர்மறையான பலன்களையே தரும் என பல ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“இந்தியா தற்போது அமெரிக்காவின் முகாமில் இருப்பது உறுதியாக தெரிந்தாலும், ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவும் வலுவானதாகவே உள்ளது. இந்தியாவின் கேந்திரிய மாற்றத்தின் போது ஏற்பட்ட மாறுபாடுகள் பெரிதாக எடுத்து கொள்ளப்படவில்லை,” என இந்தியாவின் முன்னாள் ராணுவ ஜெனரல் ஹர்ஷா ககர் தெரிவித்துள்ளார். அதேபோன்று மாறும் புவி அரசியல் சூழல் ரஷ்யாவுக்கும் கடினமானதாகவே உள்ளது.

ரஷ்யாவின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான ஆய்வுக் கழகத்தின் தலைவர் அந்தேரி, இந்தியா மற்றும் அமெரிக்காவின் உறவு விரிவடைவது குறித்து நாம் அச்சப்பட தேவையில்லை. அது ரஷ்யாவுக்கான நேரடியான அச்சுறுத்தல் இல்லை. அது சீனாவுக்கான சவாலாக உள்ளது எனத் தெரிவித்தார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

**10) பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்சோடி அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்
2) மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி

**11) பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

1)  ……………………  2)  ………………………

**12) பின்வரும் சொற்களுக்கான சிங்கள கருத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1) அம்மாமார் - ……………………  2) வெள்ளை நிறம் -………………………


**13) பின்வரும் ஆங்கில வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

1) He …………….. in the canteen ( is, are)
2) It has two ………… (eye, eyes)

**14) பின்வரும் வாக்கியங்களுக்கான தமிழ்க் கருத்தை எழுதுக.**

1) தெ பொன்ன - …………………………………………………………
2) ஒயாட்ட மொனவத ஓன? - …………………………………………………………

❖ **15 தொடக்கம் 29 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடை எழுதுக.**

15) 

எண்சட்டத்தில் வகைக் குறிக்கப்படும் எண்ணைச் சொற்களில் எழுதுக?


……………………………………………………………………

16) 

| | | |
|---|---|---|
| | 9 | |
| 7 | | 1 |
| 5 | 0 | |

அருகே தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் ஒரு தடவை பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக

………………………

17) 

1) நிறந்தீட்டப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக?


………………………

2) பின்வரும் உரோமன் எண்களை ஏறுவரிசையில் எழுதுக?

XX, XV, XI, VIII - ………………………………………

18) 60 கொடிகளைக் கொண்டு ஒவ்வொரு கொடித் தொகுதியிலும் சம எண்ணிக்கையில் கொடிகள் இருக்குமாறு 4 கொடித்தொகுதிகளை அமைக்கலாம். ஒரு கொடித்தொகுதியில் உள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது?

……………………….

19) 


1) கடிகாரமுகத்தில் ஒரு மணி கழிந்து ஐம்பது நிமிடத்தினை குறித்துக் காட்டுக?
2) பி.ப 2.00 மணியை 24 மணிநேரக் கடிகாரத்தில் காட்டப்படும் முறையில் எழுதுக?

………………………

20) பூக்கன்று விற்பனை நிலையத்தில் 3874 மல்லிகைக் கன்றுகளும் 2579 ஓக்கிட் கன்றுகளும் 1023 ரோசாக்கன்றுகளும் இருந்தன. அங்கு இருந்த மொத்தப் பூக்கன்றுகள் எத்தனை?

………………………

21) எண்கோலத்தினை அவதானித்து வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்க.

1) ………., ……….., 54, 63, 72
2) 2, 9, 16, 23, ………

## விடைகள்

10) 1) தமையன்   2) மேலோன்

(26x 1 = 26)

---

11) 1) knife   2) goat
12) 1) அம்மலா   2) சுது பாட்டய்
13) 1) is   2) eyes
14) 1) தேநீர் குடியுங்கள்.   2) உங்களுக்கு என்ன வேண்டும்?

(8 x 1 = 8)

---

15) ஆயிரத்து நூற்று இருபத்து மூன்று
16) 97 510
17) 1) IV
2) VIII, XI, XV, XX
18) 15
19) 1) 1.50 இற்கு குறிக்க வேண்டும்
2) 14:00
20) 7 476
21) 1) 36, 45   2) 30
23) 450
24) 1) 19 : 00
2) பயிற்சிக் கொப்பி, அழிறப்பர்
25) 10*l* 500*ml*
26) 250g
27) 1) உருளை   2) 02
28) 2m 25cm
29) 1) வியாழன்   2) 90

ஈழநாடு



# நாட்டு மக்களின் நன்மதிப்பை இழந்துள்ளது பாராளுமன்றம்

## ஐக்கிய மக்கள் சக்தி கவலை



கொழும்பு, டிச.07

**“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது. எனவே, அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமான செயற்பாடுகளாகும்” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.**

திஸ்ஸ அத்தநாயக்கவின் ஆன்மிகப் பயணத்தின் ஓர் அங்கமாக நேற்றுமுன் தினம் நுவரெலியா - வலப்பனை நாராங்தலாவ, மைலகஸ்தென்ன ஸ்ரீ தர்மராஜராமய விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”தமது கருத்துகளை, நிலைப்பாடுகளை சுதந்திரமாக பாராளுமன்றத்துக்குள் வெளியிடும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும். அந்த உரிமையைப் பயன்படுத்தி கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தாக்க முற்படுவது, அவருக்கு அச்சுறுத்தல் விடுப்பது என்பன ஏற்புடைய விடயமாக அமையாது. அவற்றைக் கண்டிக்க வேண்டும். அதேபோல் பாராளுமன்றத்துக்குள் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற சம்பவங்களானவை ஜனநாயக ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

எதிரணி எம்.பிக்களுக்கு எதிரான அச்சுறுத்தலை ஏற்கமுடியாது. எனவேதான், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை சபை அமர்வுகளைப் புறக்கணிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கான நடவடிக்கை எவ்வாறு இடம்பெறும் என்பதை கட்சியின் பாராளுமன்றக் குழு தீர்மானிக்கும்.

குறிப்பாக பாராளுமன்றம் தொடர்பில் மக்களுக்கு தற்போது நன்மதிப்பு இல்லை. எனவே, பாராளுமன்றத்துக்குள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்து மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கும், கட்சித் தலைவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது. அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்காலத்தில் பாராளுமன்றமும் வன்முறைக்களமாக மாறும் அபாயம் உள்ளது.

நிவாரணங்கள் கிடைக்கும், சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த அரசுக்கு மக்கள் வாக்களித்தனர். அந்த எதிர்ப்பார்ப்பு ஒரு வருடத்துக்குள்ளேயே தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது. நாட்டில் இன்று என்ன நடக்கின்றது? நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் சூழலும் இல்லை” - என்றார். (இ)

# சபை அமர்வை நேற்றும் புறக்கணித்த சஜித் அணி

கொழும்பு, டிச. 07

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றைய சபை அமர்வைவும் புறக்கணித்திருந்தது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. எனினும், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்கவில்லை.

எதிரணி உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை, சபை அமர்வில் பங்கேற்கப்போவதில்லை என கடந்த சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பாராளுமன்றத்தின் கௌரவத்தை காக்கவும்

## எம்.பிக்களிடம் சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு, டிச. 07

“பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலும், நிலையியல் கட்டளைகளின் பிரகாரமும் செயற்படுங்கள்.”

- இவ்வாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கோரிக்கை விடுத்தார்.



பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்குக் கூடியது. இதன்போதே சபாநாயகர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாட்களில் சபைக்குள்ளும், வெளியேயும் நடந்த சம்பவங்கள் தொடர்பில் விசேட குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் எனவும் சபாநாயகர் உறுதியளித்தார். (இ)

# மோசடிகள் அம்பலமாகிவிடும் என்பதால்தான் சபை அமர்வு சஜித் தரப்பினரால் புறக்கணிப்பு

## இப்படி காரணம் கூறியது ஆளுந்தரப்பு

கொழும்பு, டிச. 07

“இன்று (நேற்று) வீடமைப்பு அமைச்சு தொடர்பான விவாதம் நடக்கவுள்ளது. எனவே, அவ்வமைச்சுப் பதவியை வகித்த சஜித் பிரேமதாஸ செய்த ஊழல், மோசடிகள் அம்பலமாகிவிடும் என்பதால்தான் அவர் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியினர் சபை அமர்வை புறக்கணித்துள்ளனர்.”

- இவ்வாறு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் நேற்று கருத்து வெளியிட்ட அவர்,

“எதிரணியின் செயற்பாடு மோசமாக உள்ளது. சபாநாயகரைக்கூடத் தாக்குவதற்கு முற்படுகின்றனர்.

நீங்கள் ஜனநாயகத் தலைவராக இருக்கின்றீர்கள். எதிரணிக்கு அதிக வாய்ப்பை வழங்குகின்றீர்கள்.

எனவே, உங்கள் மீது கை வைப்பதற்கு எவருக்கும் நாம் இடமளிக்கமாட்டோம்.



எதிரணியினர் ஊடக பிரச்சாரத்துக்காகவும், சர்வதேசத்துக்காகவுமே சபை அமர்வுப் புறக்கணிப்பு நாடகத்தை அரங்கேற்றுகின்றனர்” - என்றார். (இ)

# சபையில் நடந்த சம்பவங்களுக்கு உடனடியாகத் தீர்ப்பு வழங்குங்கள்

## சபாநாயகரிடம் அநுர வேண்டுகோள்

கொழும்பு, டிச. 07

“குழுக்களை அமைத்து காலம் கடத்த வேண்டாம். சபையில் நடந்த சம்பவங்களை அவசர விடயமாகக் கருதி நீங்களே ஆராய்ந்து பார்த்து தீர்ப்பை வழங்குங்கள்.”

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம்.பி., சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று கோரிக்கை விடுத்தார்.

சபையில் அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:-

“பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனில் அது பாரதூரமான விடயமாகும். எனவே, கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாட் களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் சி.சி.ரி.வி. காட்சிகள் உள்ளன. அவற்றை நீங்கள் ஆராய்ந்து பார்த்து தீர்வொன்றை எடுங்கள். அதற்கான பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

மாறாக குழுக்களை அமைத்தால் அது காலம் கடந்துவதாகவும், குழப்பங்களை விரிவுபடுத்துவதாகவுமே அமையும்” - என்றார். (இ)



# ஆங் சான் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறை!



மியன்மாரில் இராணுவத்தால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட ஆங் சான் சூகிக்கு, நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களைத் தூண்டியதாகவும், கொரோனா தடுப்பு விதிகளை மீறியதாகவும் அவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் நிரூபணம் ஆகியுள்ளதால், இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. 76 வயதாகும் ஆங் சான் சூகி, சிறைக்கு அனுப்படுவாரா அல்லது வீட்டுச் சிறையே தொடருமா என்று இன்னும் தெளிவாகவில்லை. முன்னதாக ஊழல், அரச ரகசியங்கள் பாதுகாப்புச் சட்டத்தை மீறியது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டதாக ஆங் சான் சூகி மீது குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. தேர்தல் முறைகேடு காரணமாக ஆட்சியை கவிழ்த்ததாக விளக்கம் அளித்த இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து வீட்டு காவலில் வைத்தது. இதனைத்தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் கிளர்ச்சிக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், ஆங் சான் சூகிக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியதற்காக கைது செய்யப்பட்ட 5,600 இற்கும் மேற்பட்டவர்களை கடந்த ஒக்டோபர் மாதம், இராணுவம் விடுவித்தமை நினைவு கூரத்தக்கது. (அ)

## கொலம்பிய கிளர்ச்சி குழு தலைவர் வெனிசுலாவில் சுட்டு படுகொலை!

கராகஸ், டிசெ. 07

கொலம்பியாவின் பார்க் கிளர்ச்சிக் குழுவின் முன்னாள் தலைவர் வெனிசுலாவில் பதுங்கியிருந்து நடத்தப்பட்ட திடீர் தாக்குதலில் கொல்லப்பட்டார் என கொலம்பிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




எல் பைசா என்ற புனைப்பெயர் கொண்ட ஹெர்னான் டாரியோ வெலாஸ்குவெஸ் வெனிசுலாவின் அபுரே மாநிலத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார் என கூறப்படுகிறது.

அவரின் மரணம் கொலம்பியாவால் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன், இந்தக் கொலை குறித்து தமக்கு தகவல் எதுவும் தெரியாது என கொலம்பிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வெகுமதிகளை எதிர்பார்த்து கூலிப்படையினர் எல் பைசாவைக் கொன்றிருக்கலாம் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எல் பைசா உடலை அதிகாரிகள் பார்க்கும் வரை அவரது மரணத்தை உறுதிப்படுத்த முடியாது என்று கொலம்பிய அதிகாரிகள் எல் டைம்போ பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர்.

பார்க் கிளர்ச்சிக் குழுக்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக கொலம்பிய அரசாங்கத்திற்கு எதிராக கடுமையாக போரிட்டு வருகின்றன. கடந்த 2016 இல் அரசு கிளர்ச்சிக் குழு இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பார்க் கிளர்ச்சி குழுவின் தலைமைப் பொறுப்பில் இருந்த எல் பைசா அச்சுறுத்தலானவராகக் கருதப்படுகிறார். 2003 இல் கொலம்பிய தலைநகர் போகட்டாவில் 36 பேர் கொல்லப்பட்டமை மற்றும் 200 பேர் காயம் அடைந்த கார் குண்டுவெடிப்பின் பின்னணியில் அவர் இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

2016 ஆம் ஆண்டு ஹவானாவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் அவர் கலந்துகொண்டபோது, ஆயுதங்களைக் கிழே வைக்கும் உறுதியான போக்கை பார்க் கிளர்ச்சி குழு வெளிப்படுத்தியது.

எனினும் 2018 ஆம் ஆண்டில் அமைதிப் பேச்சுவார்த்தையை பார்க் கிளர்ச்சி குழு முறித்துக்கொண்டது.

தொடர்ந்து 2019 ஆம் அண்டு முன்னாள் பார்க் கிளர்ச்சிக் குழுவின் தலைவர்களான இவான் மார்க்வெஸ் மற்றும் ஜெசஸ் சான்ட்ரிச் ஆகியோருடன் சேர்ந்து செகுண்டா மார்கெட்டாலியா என்ற புதிய கிளர்ச்சிக் குழுவை உருவாக்குவதாக எல் பைசா அறிவித்தார். அத்துடன் அரசுக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பமாவதாகவும் அவர் கூறினார். (அ)

## பதற்றங்களுக்கு மத்தியில்

# அமெ.-ரஷ்ய தலைவர்கள் இன்று மிகமுக்கிய பேச்சு!



நியூயோர்க், டிசெ. 07

உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கில் அந்த நாடு மீது படையெடுக்க ரஷ்யா ஆயத்தமாகி வருவதாகக் கூறப்படும் விவகாரத்தால் அமெரிக்கா-ரஷ்யா இடையே உருவாகியுள்ள பதற்றங்களுக்கு மத்தியில் இரு நாடுகளின் தலைவர்களும் இன்று பேச்சில் ஈடுபடவுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் ஆகியோர் இன்று செவ்வாய்க்கிழமை மெய்நிகர் வழியில் சந்திக்கவுள்ளதை இரு நாடுகளும் உறுதிப்படுத்தியுள்ளன.

உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கில் 175,000 துருப்புக்களைக் குவித்து பல முனைத் தாக்குதல்களை நடத்த ரஷ்யா தயாராக வருவதாக அமெரிக்கா உளவுத் துறையினரின் அறிக்கைகளை மேற்கோள் காட்டி பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் முயற்சிகள் தொடர்பில் அமெரிக்கா - ரஷ்யா இடையே பதற்ற நிலை அதிகரித்துள்ளது. உக்ரைனில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ரஷ்யா ஆயத்தமாகி வரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்தார்.

ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் விரிவான முயற்சிகளை எனது நிர்வாகம் ஒருங்கிணைத்து வருகிறது. அந்த நடவடிக்கையானது ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு மிகக் கடினமான ஒன்றாக அமையும் என பைடன் தெரிவித்தார்.

இன்று பைடனும் புடினும் கலந்துரையாடவுள்ள நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யாமீது அமெரிக்கா புதிய தடைகளை விதிக்க திட்டமிடுகிறது. அவ்வாறு தடை விதிக்கப்பட்டால் நாங்களும் எதிர்வினை ஆற்றுவோம் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

இதற்கிடையே தங்கள் நாட்டு எல்லை அருகே ரஷ்யா 94,000 படையினரை தற்போது குவித்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் தெரிவித்தார்.

ரஷ்யாவால் இணைத்துக்கொள்ளப்பட்ட கிரீமியா தீபகற்பம் அருகே ஏராளமான ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நமது உளவுத் துறை தகவலின்படி, அவர்களின் எண்ணிக்கை 94,300 ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ரஷ்ய ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை எதிர்த்து, ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினர் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து அவர் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர்.

ரஷ்ய இராணுவ உதவியுடன் அவர்கள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினர்.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையையொட்டி ரஷ்யா தனது படைகளைக் குவித்து வருவதாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் எச்சரித்துள்ளன.

குளிர்காலத்தின்போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து தன்னுடன் இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளதாக அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அச்சம் தெரிவித்துள்ளன. இது ரஷ்யா - அமெக்கா இடையிலான பதற்றத்தை அதிகரித்துள்ளது.

எனினும் உக்ரைனை ஆக்கிரமிக்க தாங்கள் முயல்வதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ரஷ்யா நிராகரித்துள்ளது.

இவ்வாறான பதற்றங்களுக்கு மத்தியில் இன்று இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் ஆகியோர் இடையிலான பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (அ)




## 3 அடி உயர மனிதருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்!

புதுடில்லி, டிசெ. 07

தெலுங்கானா மாநிலத்தில் 3 அடி உயரமுள்ள ஒருவருக்கு, சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. தெலுங்கானாவின், கரீம்நகரைச் சேர்ந்த 42 வயதுடைய கட்டிபள்ளி ஷிவபால் தற்போது ஹைதராபாதில் வசித்து வருகிறார்.

3 அடி உயரமுள்ள அவர் 2000ஆம் ஆண்டில் ஹைதராபாதிலுள்ள ஒரு நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார். வேலை பார்த்தே 2004ஆம் ஆண்டில் பட்டம் பெற்றுள்ளார். கார் ஓட்டவேண்டும் என்பது இவரது ஆசை. ஆனால் உயரம் அதற்கு தடையாக இருந்தது. இந்நிலையில், இணையத்தை பார்த்தபோது உயரம் குறைவான ஒருவர் தனக்கு ஏற்றபடி காரை மாற்றியமைத்தது குறித்து தெரிந்து கொண்டுள்ளார்.

இதையடுத்து காரை வாங்கி தன் உயரத்துக்கு ஏற்ப அதில் மாற்றங்களை செய்துகொண்டுள்ளார். அதன்பின்னர் நண்பர்களின் உதவியுடன் கார் ஓட்டப் பழகியுள்ளார். ஆனால், சாரதி அனுமதிப்பத்திரம்பெற முடியவில்லை. சட்ட விதிகளின்படி குறிப்பிட்ட உயரம் இருந்தால் மட்டுமே அனுமதிப் பத்திரம் பெற முடியும் என்பதால், போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த உயரதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளார்.

இதையடுத்து அவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)



## உலக டெஸ்ட் தரவரிசையில் இந்தியா மீண்டும் முதலிடம்!

டுபாய், டிசெ. 07

நடப்பு உலக டெஸ்ட் சம்பியனான நியூசிலாந்துக்கு எதிரான தொடரை 1- 0 என வென்ற இந்திய அணி, சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த நியூஸிலாந்து அணிக்கு எதிராக இந்தியா 372 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி,சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 14 டெஸ்ட் தொடர்களையும், விராட் கோலி தலைமையில் 11 தொடர்களையும் வென்றுள்ளனர்.

நியூசிலாந்து முன்னதாக கடந்த வாரம் கான்பூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியை சமநிலையில் முடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## நியூசிலாந்துடனான டெஸ்ட்; இந்தியா இமாலய வெற்றி!

மும்பை, டிசெ. 07

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 372 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இரு போட்டிகள் கொண்ட தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் சென்ற நியூசிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. கான்பூரில் நடந்த முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த மூன்றாம் திகதி மும்பையில் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா முதல் இனிங்ஸ ிற்காக 325 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய நியூசிலாந்து அணி 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் 276 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்களை இழந்த நிலையில் இந்திய அணி ஆட்டத்தை இடைநிறுத்தி நியூசிலாந்து அணிக்கு துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை வழங்கியது. அப்போது, நியூசிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 540 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது நியூசிலாந்து அணி 140 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து இருந்தது. இந்தநிலையில் நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கிய நிலையில் 11 ஓவர்களே நியூசிலாந்து அணி தாக்குப்பிடித்தது.

வெறும் 27 ஓட்டங்களுக்கு மீதமிருந்த 5 விக்கெட்களையும் நியூசிலாந்து அணி இழந்தது. இதனால், 372 ஓட்டங்களால் இந்திய அணி இமாலய வெற்றி பெற்றது.

இந்திய அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக ராகுல் டிராவிட் பொறுப்பேற்ற பின்னர் இந்திய அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

அத்துடன், இதுவே இந்திய அணியின் மிகப்பெரிய ஓட்ட வெற்றியுமாகும். முன்னதாக - 2015 இல் தென்னாபிரிக்காவை 337 ஓட்டங்களால் வீழ்த்தியிருந்தமையே சாதனையாக இருந்தது.

போட்டியின் நாயகனாக மயங்க் அகர்வாலும், தொடரின் நாயகனாக அஸ்வினும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

### எல். பி. எல். - ரி-20 தொடர்

# காலி கிளாடியேற்றர்ஸிடம் யாழ்ப்பாணம் படுதோல்வி!

கொழும்பு, டிசெ. 07

எல். பி. எல். இருபது - 20 தொடரின் முதல் போட்டியில் நடப்பு சம்பியனான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியை 54 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றது காலி கிளாடியேற்றர்ஸ் அணி.

லங்கா பிறீமியர் லீக் எனப்படும் எல். பி. எல். இருபது - 20 தொடரின் இரண்டாவது தொடர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பமானது. இதில், முதல் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணியே இம்முறை யாழ்ப்பாணம் கிங்ஸ் என்ற பெயரில் புதிய நிர்வாகத்தின் கீழ் பங்கேற்கிறது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற முதல் போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியும், காலி கிளாடியேற்றர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் அணியின் தலைவர் திஸர பெரேரா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய காலி கிளாடியேற்றர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய தனுஷ்க குணதிலக (08), குசல் மெண்டிஸ் (16) ஆகிய இருவரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கவில்லை. அவர்களைத் தொடர்ந்து 41 வயதான மூத்த வீரர் முஹமட் ஹபீஸும் (15) குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



அவுஸ்திரேலியாவின் மூத்த வீரரான பென் டன்க் (17), அணித் தலைவர் பானுக ராஜபக்ஷ ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 52 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

தொடர்ந்து சமித் பட்டேலுடன் 5ஆவது விக்கெட்டில் மேலும் 40 ஓட்டங்களை பானுக ராஜபக்ஷ பகிர்ந்தார். பானுக ராஜபக்ஷ 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களையும் சமித் பட்டேல் 6 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்த ஓய்வு பெற்ற இசுரு உதான ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்தார்.

யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில் ஜேடன் சீல்ஸ் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் வனிந்து அசரங்க டி சில்வா 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் கிங்ஸ் 18.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

8ஆவது வீரராகக் களமிறங்கிய வஹாப் ரியாஸ் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். இவர் மாத்திரமே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றார். உபுல் தரங்க (17), சம்மு அஷான் (15), அணித் தலைவர் திஸர பெரேரா (11) ஆகியோரும் ஏனையவர்களும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

காலி கிளாடியேற்றர்ஸின் பந்துவீச்சில் 4 ஓவர்களில் சமித் பட்டேல் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் முஹமட் ஹபீஸ் ஓர் ஓட்டமற்ற ஓவர் உட்பட 4 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை யும் புலின தரங்க 13 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் விருது சமித் பட்டேலுக்கு வழங்கப்பட்டது. (ஐ)

## மே. இ. தீவுகள் அணிக்கு புதிய தலைவர் நியமனம்

ஜமைக்கா, டிசெ. 07

காயம் காரணமாக பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பொலார்ட் விலகினார். இதனால், ஒருநாள் மற்றும் இருபது - 20 அணிகளுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி, பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 இருபது - 20 தொடர்களில் பங்கேற்கிறது. இருபது - 20 தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் ஏற்பட்ட காயம் காரணமாக பாகிஸ்தான் அணியின் தலைவர் பொலார்ட் விலகியுள்ளார்.

இதனால், இருபது - 20 அணிக்கு நிக்கோலஸ் பூரணும், ஒருநாள் அணிக்கு ஷாய் ஹோப்பும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஷாய் ஹோப் முதன்முறையாக ஒருநாள் அணியின் தலைவராக செயல்படவுள்ளார். பூரண் தலைமையில் சமீபத்தில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடிய மே. இ. தீவுகள் அணி, 4-1 எனத் தொடரை வென்றது. (ஐ)






## விராட் கோலி புதிய சாதனை

மும்பை, டிசெ. 07

சர்வதேச கிரிக்கெட்டின் மூன்று வகைப் போட்டிகளிலும் 50 வெற்றிகளில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார்.

இந்திய அணித் தலைவர் விராட் கோலி, 2008 முதல் இந்திய அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 97 டெஸ்ட் போட்டிகள், 254 ஒருநாள், 95 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை எந்தவொரு வீரரும் டெஸ்ட், ஒருநாள், இருபது - 20 என மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் 50 வெற்றிகளில் பங்கேற்றதில்லை.

மும்பை டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்றதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியில் இடம்பெற்று 50ஆவது வெற்றியில் பங்களித்துள்ளார் விராட் கோலி.

இதனால் டெஸ்ட், ஒருநாள், இருபது -20 என மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் 50 வெற்றிகளைக் கண்ட முதல் வீரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார். இந்த சாதனை வேறு எந்த கிரிக்கெட் வீரருக்கும் கிடையாது.

மேலும், விராட் கோலி இதுவரை பங்கேற்ற, 97 டெஸ்ட் போட்டிகளில் 50 வெற்றி போட்டிகளிலும், 254 ஒருநாள் போட்டிகளில் 153 வெற்றி போட்டிகளிலும், 95 இருபது - 20 போட்டிகளில் 59 வெற்றி போட்டிகளிலும் பங்களிப்பு வழங்கியுள்ளார். (ஐ)

ஈழநாடு



## கைதடியில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 07

யாழ்ப்பாணம், கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துத் சிதறியுள்ளது.



இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளன.

இந்தநிலையிலேயே கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளது. (இ - 03)

## போலி சி.ஐ.டி. கைது!

காத்தான்குடி, டிசெ. 07

திருட்டு விசாரணையைச் சமாளிப்பதற்குக் கப்பம் கோரிய போலி சி.ஐ.டி. ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி, உப்போடை புறநகர் பகுதியில் அண்மையில் நகை திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதன் பிரகாரம் குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை அடையாளம் கண்ட காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொள்வதற்காக குறித்த சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளனர்.

பின்னர் சந்தேகநபர் வீட்டில் இல்லாமையால் மீண்டும் வருவதாகக் கூறி அவ்விடத்தில் இருந்து சென்றுள்ள நிலையில் அதே வீட்டுக்கு சில நிமிடங்களின் பின்னர் மற்றுமொரு போலி சி.ஐ.டி. எனக் கூறப்படும் நபர் ஒருவர் சென்றுள்ளதுடன் ரூபாய் 10 ஆயிரம் கப்பமாகத் தந்தால் குறித்த பிரச்னையைத் தீர்த்து தருவதாக சந்தேகநபரின் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.




கப்பம் கோரிய போலி சி.ஐ.டி. தொடர்பில் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக் கமைய நேற்றுமுன்தினம் இரவு காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் சென்ற பொலிஸார் குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் வைத்திருந்த அடையாள அட்டையில் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்விப் பணிப்பாளர் எனப் பதவி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ)




# பலவீனத்தை மறைக்க அடக்குமுறையில் அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 07

**அரசு தனது பலவீனத்தை மறைக்க, பாராளுமன்றத்தில் அடக்குமுறையை - அராஜகத்தை கையில் எடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.**

அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பாராளுமன்ற வளாகத்தில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாட்டின் ஜனநாயகத்தின் உயரிய தளம் பாராளுமன்றம். அங்கே மக்களது பிரச்னைகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான பூரண வாய்ப்பு காணப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் பூரணமாக பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வசதியை சபாநாயகர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஆனால், இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மக்கள் பிரச்னைகளை பாராளுமன்றத்தில் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.



அரச தரப்பின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியும் அதனது பங்காளிக் கட்சி உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறி பாராளுமன்ற அமர்வைப் பகிஷ்கரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று அரசில் உள்ள அமைச்சர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்களது தேர்தல் தொகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. கிராமத்துக்கு, நகரத்துக்குச் சென்று மக்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரச தரப்பு உறுப்பினர்கள் குழப்பமடைந்த நிலையில் உள்ளனர். தமது விரக்தியை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது சுமத்தப் பார்க்கின்றனர். நாம் கேட்பது உங்களால் முடியுமாக இருந்தால் மக்களிடம் செல்லுங்கள். மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு விடை கூறுங்கள். மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை முன்வையுங்கள். அதனை விடுத்து அடிதடியால் தீர்வுகளை எட்ட முடியாது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக முன்வைப்பதற்கான சூழ்நிலையை சபாநாயகர் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இலங்கை பாராளுமன்றத்தில் ஜனநாயக ரீதியாக உறுப்பினர்களுக்குக் காணப்படும் கருத்துசி சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதைக் கொண்டு வந்து தரும். அதேபோல் சர்வதேசத்துக்கு எமது நாட்டை பற்றிய சரியான செய்தியைப் பெற்றுக்கொடுக்கும். அதனை விடுத்து மக்கள் பிரதிநிதிகளின் கருத்துச் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கி பிரச்னைகளை மூடி மறைத்து இந்த அரசை முன்கொண்டு செல்ல முடியும் என நினைப்பது வெறும் சிறுபிள்ளைத்தனமான செயலாகும்"

- என்றார். (இ)

# தமிழ் பேசும் மக்களின் காவலனாக முற்போக்குக் கூட்டணி செயற்படும்

## மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு டிசெ. 07

"தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கூட்டணி அல்ல தமிழ் முற்போக்குக் கூட்டணி. இது மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்கள் கூட்டணி. அதன் காரணமாகவே இன்று தமிழ் முற்போக்குக் கூட்டணி இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான விஜயந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"கடந்த ஆறு வருடங்களாக ஒரே பாதையில் பயணித்து இலங்கையின் அரசியல் தளத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பதிவு செய்து கொண்டுள்ள காரணத்தால் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியை ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சியாக இலங்கை தேர்தல்கள் ஆணையாளர் அரசியல் கட்சியாக பதிவு செய்துள்ளார். அதற்கு டோர்ச் லைட் சின்னமும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தில் ஒரு கூட்டணியாகச் செயற்பட்டு 6 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்கின்ற அளவுக்கு கடந்த காலங்களில் இதன் வளர்ச்சி இருந்திருக்கின்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது இன்று இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லை எட்டி இருக்கின்றது. ஏனைய கூட்டணிகளுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயல்பட்டு வருகின்றது. இலங்கையில் பல கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டாலும் அவை ஒரு குறுகிய காலத்தில் இல்லாமல் போயுள்ளது. இந்த நிலைமை மலையகத்திலும் ஏற்பட்டுள்ளது.

இந்த கூட்டணி தனியே மலையகத்தை மாத்திரம் அல்லாமல் கொழும்பு உட்பட ஏனைய மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஓர் அமைப்பாக இருக்கின்றது. அனைத்து சமூகங்களையும் இணைத்துக் கொண்டு முன்நோக்கி செல்வதே இந்த கூட்டணியின் எதிர்பார்ப்பாகும்.

எதிர்காலத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இலங்கையின் அரசியலில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்ற பிரதான அரசியல் கட்சியாக உருவெடுப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதாகும்.

அதேநேரம், தமிழ் முற்போக்குக் கூட்டணி தமிழ் பேசும் மக்களின் காவலனாகவும் அனைவரையும் அனைத்துச் செல்கின்ற அமைப்பாகவும் செயல்படும்" - என்றார். (இ)

## 3மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறைவடைந்தது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சு சுதந்திரம் பறிக்கப்படுவதாக குற்றம் சுமத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நேற்று அமர்வை புறக்கணித்தனர். இதையடுத்து சபை இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நோய்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைரஸும் வயதால் பாதிக்கப்படுவதில்லை. புதிய ஒமைக்ரோன் வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி மிகவும் முக்கியமானது" என்றும் அவர் கூறினார். (ஐ)

## சமையல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போது தலைக்கவசம் அணிந்திருந்தமையால் காயம் எதுவுமின்றி தப்பிய பெண் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

"நான் உணவு தயார் செய்தபோது, அடுப்பை அணைத்துவிட்டு பழைய சிலிண்டரை கழற்றினேன். பலத்த சத்தத்துடன் அடுப்பு வெடித்தது. பறந்த துண்டுகள் உடலில் பட்டன. நான் தலைக்கவசம் அணிந்து கண்ணாடியையும் மூடியிருந்தமையால் வெடித்துப் பறந்த துண்டுகள் கண்களில் படவில்லை. எரிவாயு அடுப்பில் சமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, சமைக்கும்போது தலைக்கவசம் அணிந்து கண்ணாடியையும் மூடியவாறே சமைக்கிறேன். இந்த நாட்களில் சமைக்கும்போது நீங்களும் தலைக்கவசத்தை அணியலாம்", என்றார். (ஐ)

## கிராமப்புற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபிவிருத்தி திட்டங்களை பூர்த்தி செய்துள்ளோம். மேலும் 52 நகர அபிவிருத்தி திட்டங் களை பூர்த்தி செய்யவுள்ளோம். அதே போன்று 2024 ஆம் ஆண்டில் மேலும் 136 நகர அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் 'சியக் நகர' திட்டத்தின் கீழ் 117 நகரங்களை அலங்காரப்படுத்தும் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதேவேளை நகரங்களில் வாகன நெரிசல் தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக 12 வாகன தரிப்பிடங்களை அமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சௌபாக்கிய நோக்கு கொள்ளைத் திட்டத்திற்கமைய அனைத்து குடும்பங்களுக்கு வசதியான வீடுகளை அமைத்துக்கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. நகர, கிராமிய, தோட்டப்புற மற்றும் இடம்பெயர்ந்தோர் மீளக்குடியேற்றுதல் ஆகியவற்றுக்காக வீடமைப்பு திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

இதன்படி நகரங்களில் குறைந்த வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளுக்கு பதிலாக 2024 ஆம் ஆண்டளவில் 50,000 வீடுகளை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதன்படி இதுவரையில் 14,083 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கிராமங்களில் குறைந்த வருமானமுடையவர்களுக்காக உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் 2024 ஆம் ஆண்டளவில் 71,110 வீடுகளை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதேவேளை இடம்பெயர்ந்தோரை மீளக்குயேற்றுவதற்காக 4000 வீடுகளையும், தோட்டப்புற மக்களுக்காக 10,000 வீடுகளையும் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## பிரியந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாரம் சியல்கோட்டில் அடித்துக் கொல்லப்பட்டதுடன், அவரின் உடலுக்கும் தீ வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சபாநாயகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படியே நாங்கள் செயல்படுவோம்.

இந்த பாராளுமன்றத்திற்கு கத்தி கொண்டு வந்து எம். பிக்களை கொல்ல முயன்ற வரலாறும் இருக்கின்றது. சபாநாயகரின் ஆசனத்திற்கு பின்னால் வந்து அவ்வாறு செய்தனர். அப்போது புத்தகங்கள், நாற்காலிகள் மூலம் தாக்கிக் கொண்டனர். இந்த வரலாறு இருந்தது. ஆனால், அப்போது அது தொடர்பான விசாரணையை இறுதியில் நிறுத்த வேண்டியிருந்தது.

இந்நிலையில் மனுஷ நாணயக்கார உரையாற்றுகையில் 5 மணியாகி இருந்தது. இதன்போது நேரம் முடிந்துள்ளது. அதன்படி ஆளும் கட்சி பிரதம கொறடா என்ற ரீதியில் நான் நியாயத்தை கூறினேன். ஆனால், அவர் சபாநாயகரை நோக்கி பொருத்தமில்லாத வசனத்தை பேசி சபாநாயகரை நோக்கி தாக்குவதற்கு சென்றுள்ளார். நாங்கள் இருக்கும் வரையில் சபாநாயகரை தாக்குவதற்கு இடமளிக்க மாட்டோம்.

இதனால் உங்களை அச்சுறுத்தி உங்களை தாக்க வந்த எம். பிக்கு எதிராக எமது எம். பிக்கள் 30 பேருக்கும் அதிகமானோர் கடிதமொன்றை வழங்கியுள்ளனர். அது தொடர்பாக விசாரணை நடத்துமாறு கேட்கின்றோம் அதற்கு நாங்கள் எதிர்ப்பு அல்ல - என்றார்.

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடியும் என்று நம்புவதாகவும் அவர் இதன்போது கூறி னார்.

மேலும், பல ஆண்டுகளாக நெதர்லாந்து இலங்கையுடன் அறிவு மற்றும் நிபுணத்துவ பரிமாற்றத்தை வழங்கியுள்ளது. மேலும், விவசாய ஆராய்ச்சி புதிய நீர்ப்பாசன முறைமை அல்லது வறட்சியை தாங்கும் பயிர் வகைகளை உருவாக்குதல் போன்றவற்றை பகிர்ந்து வருகிறது.

இதன்மூலம், உற்பத்தி மற்றும் இலாபத்தை அதிகரிக்க முடியும். இது விவசாயிகளுக்கு மாத்திரமின்றி நுகர்வோருக்கும் - இலங்கையின் உணவு பாதுகாப்புக்கும் நன்மை பயக்கும்.

குறைந்த நீர், ஆற்றல், மூலப் பொருட்கள் கரிம சாத்தியக்கூறுகளை பயன்படுத்துவதன் மூலம் நிலையான உணவு உற்பத்தி, நுணுக்கமான உற்பத்தி முறைமைக்காக இலங்கையின் நிறுவனங்களுடன் நெதர்லாந்து இணைந்து செயலாற்றுகிறது. நாம் இலங்கையின் பண்ணையாளர்களுடன் இணைந்து செயல்பட்டு அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளோம்.

வரவிருக்கும் ஆண்டுகளில் விவசாய ஒத்துழைப்புக்கள் ஆழமடைவதை எதிர்பார்க்கிறோம். அதிகரித்து வரும் சனத்தொகைக்கு உணவளிக்கும் அதே நேரம் 'ஸ்மார்ட்' நுட்ப விவசாயத்துக்காக இலங்கையுடன் இணைந்து செயல்படவும் தயாராகவுள்ளோம். இதற்காக விவசாயிகள் தண்ணீரில் கவனம் செலுத்துகின்றனர்.

கடலோர துறைமுகம் மற்றும் ஆறு சார் பொறியியல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் காலநிலைக்கு ஏற்ற கட்டுமான திட்டங்களை மேம்படுத்த நெதர்லாந்து நீர் பொறியியில் வல்லுநர் இலங்கையின் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், புத்தளம், பொலநறுவை, மொனராகலை மாவட்டங்களில் நிலத்தடி நீர் கண்காணிப்பு வலையமைப்பை அமைப்பதில் இலங்கை நிபுணர்களுடன் தற்போது நெதர்லாந்து பணியாற்றுகிறது - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# டிப்பர் தடம் புரண்டு விபத்து இளைஞர் பலி; இருவர் காயம்!

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சியில் இளம்பெண் ஒருவரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வட்டக்கச்சி - புதுப்பாலம் பகுதியில் அதிவேகமாக வந்த டிப்பர் வாகனம் வாய்க்கால் ஒன்றுக்குள் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதில், ஒருவர் உயிரிழந்ததுடன் இளம்பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயம் அடைந்தனர்.

இதேவேளை குறித்த டிப்பரை சிலர் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றனர் எனவும் இதனால், டிப்பர் வாகனச் சாரதி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தியதால் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளான தாகவும் கூறப்படுகின்றது.

இதில், டிலக்சன் என்ற இளைஞர் உயிரிழந்தார். அந்த வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படும் 23 வயது யுவதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை, இளம் பெண்ணை கடத்திச் சென்றமையாலேயே தாம் விரட்டிச் சென்றனர் என்று அந்த வாகனத்தை துரத்திய தரப்பினர் தெரிவித்தனர். எனினும், இதனை மற்றைய உறுதிப்படுத்த முடியவில்லை. (ஐ)

# நாவற்குழியில் வாள்வெட்டு; இரண்டு இளைஞர்கள் காயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 07

நாவற்குழி புதிய குடியேற்றத் திட்டப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் வாள்வெட்டில் முடிந்ததில் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றதாகத் தெரிய வருகின்றது. இதில், 20, 21 வயது இளைஞர்கள் இருவரே காயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்துகளை தவிர்ப்பதற்கு சைக்கிள்களுக்கு ஸ்ரிக்கர்!

## சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 07

சைக்கிள்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கையை நேற்று மாலை யாழ். சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டனர்.

வீதி விபத்துக்களை குறைப்பதற்காக 'உங்களின் பாதுகாப்பிற்காக நாம்' எனும் கருப்பொருளில் சைக்கிள்களுக்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டும் பணி யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கே. கே. எஸ். பிரதான வீதியிலுள்ள சுன்னாகம் சந்தியில் வைத்து வீதியால் சைக்கிள்களில் சென்றவர்கள் மறிக்கப்பட்டு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைவாக, மாவட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவும் சுன்னாகம் பொலிஸ் போக்குவரத்து பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்று முன்னெடுத்திருந்தனர். (ஐ-3)

## அமைச்சுகளுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிரேஷ்ட எம்.பி. குறிப்பிட்ட அமைச்சுக்கள் இராஜாங்க அமைச்சுக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றிலிருந்து 10 ரூபாயை வெட்டி விடுவதாகக்கூறி விவாதத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும். இதற்கமைய நேற்றைய விவாதத்தை ஜே . வி. பி. யின் விஜித ஹேரத் எம்.பி.யே ஆரம்பித்து வைப்பதாக ஏற்கனவே பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியினர் நேற்று பாராளுமன்ற அமர்வை புறக்கணித்து போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறான நிலையில் பிரதான எதிர்க்கட்சி எம். பிக்கள் இன்றி சபை கூடிய நிலையில் சபையில் ஜே .வி. பி. தலைவரும் எம். பியுமான அநுர குமார திஸநாயக்க , விஜித ஹேரத் எம்.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. ஆகியோர் அமர்ந்திருந்தனர். இதன்போது வெள்ளி, சனிக்கிழமைகளில் சபையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அவர்கள் விசேட கூற்றுக்களை முன்வைத்து விட்டு சபையிலிருந்து வெளியேறினர்.

இதன் பின்னர் விவாதத்தை ஆரம்பித்து வைக்க சபாநாயகர் முயன்றார். ஆனால், சபையில் விஜித ஹேரத் எம். பி. இன்மையால் சம்பிரதாய முறைப்படி விவாதத்தை ஆரம்பிக்க முடியவில்லை. எனினும், இந்த நிலைமையை முற்கூட்டியே கணித்திருந்த சபாநாயகர், பாராளுமன்ற செயலாளருடன் கலந்துரையாடியிருந்தமையால் அவரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட அமைச்சு, இராஜாங்க அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகளை சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அரச தரப்பினர் திருத்தங்களுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஹாரஸ், ஐக்கிய மக்கள் சக்தி மூலம் பாராளுமன்றம் வந்த டயான கமகே ஆகியோரின் உரைகளுடனும் நிதி ஒதுக்கீடுகள் நிறைவேற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து சபை நடவடிக்கை இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu




# சபாநாயகரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது பாராளுமன்றம்

## எதிர்க்கட்சியின் பிரதம கொறடா குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெம்பர் 07

பாராளுமன்றம் சபாநாயகரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் பக்கச்சார்பாகச் செயல்படுவதைக் கண்டுகொள்ள முடியுமாக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி எம்.பியான மனுஷ நாணயக்காரவைத் தாக்க முற்பட்டபோதும், சபா நாயகர் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். சபாநாயகரின் கண் முன்னே நடைபெற்ற சம்பவத்துக்கு நட வடிக்கை எடுக்காமல் குழுவொன்றை நியமிப்பது வேடிக்கையான விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகரானதும் கட்சியின் பதவியைக் கைவிட வேண்டும் எனவும், இவர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெலிகமை பிரதேச அமைப்பாளராகச் செயல்படுகின்றார் எனவும் கிரியெல்ல எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளார். (இ)

# பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிரணியினரைச் சந்தித்த பிரதமர்

கொழும்பு, டிசெ. 07



அரசுக்கு எதிராக பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப் பாட்டத்தில் ஈடு பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரை யாடியுள்ளார்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண் டும் என்று வலியுறுத்தி நேற்றுக் காலை பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில் அந்த இடத் துக்குச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ச அங்கிருந்தவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடியதுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது இதற்கும் மேல் எம்.பிக்களை கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதன்போது, ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவ்விடத்தில் இருந்ததுடன், அவர்களுடன் கடந்த காலங்களில் தான் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.(இ)

## பிரியந்த குமார படுகொலை:

# விசாரணை குறித்து நாளாந்தம் விளக்கம்

## பாகிஸ்தான் உறுதி என்கிறார் பீரிஸ்



கொழும்பு, டிச. 07

"பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும், அது தொடர்பில் இலங்கைக்கு நாளாந்தம் தெளிவுபடுத்தப்படும் எனவும் பாகிஸ்தான் அரசு உறுதியளித்துள்ளது."

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாகிஸ்தானில் உயிரிழந்த பிரியந்த குமாரவின் பிள்ளைகள் மற்றும் குடும்பம் தொடர்பில் அரசு கரிசனை கொண்டுள்ளது. இழப்பீட்டைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பாகிஸ்தான் அரசுடன் பேச்சு நடத்தப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள், நீதி நிலைநாட்டப்படும் எனப் பாகிஸ்தான் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

விசாரணை தொடர்பில் இலங்கைக்கு நாளாந்தம் தெளிவுபடுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 07 - 1997 | 30 - 11 - 2021 |

## மதிகரன் ஆறுமுகம்

கனடா Toronto வைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மதிகரன் ஆறுமுகம் கடந்த 30-11-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், திருப்பூங்கொடி ஆறுமுகம் ராஜேஸ்வரி தம்பதிகள், வைத்திலிங்கம் கிருபாமணி தம்பதிகளின் பாசமிகு பேரனும்,ஆறுமுகம் மதிமோகன் விஜிதா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், நிகேதா அவர்களின் அன்பு அண்ணனும், லலிதாம்பிகை, லக்ஸ்மனன் (சுவிஸ்), ராதா, புஸ்பராஜா (பிரித்தானியா), மதீஸ்வரன், பாரதி (கனடா) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும்,வான்மதி, முத்துலிங்கம்(கலிபோர்ணியா), சஹானா(தவமதி), விக்னேஸ்வரன்(கலிபோர்ணியா), உசேனி(சிவமதி – பிரித்தானியா), குமரகுருபரன், ரதி, ரகுபரன், வாணி ஆகியோரின் அன்பு மருமகனும்,குமாரசாமி – சின்னம்மா, கந்தப்பு – அன்னம்மா (புங்குடுதீவு- 12), வேலுப்பிள்ளை – வள்ளியம்மை, கண்ணையா – மனோன்மனி (புங்குடுதீவு -2) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**மதிமோகன் - தந்தை**
**Mobile : +14167072952**
**வைத்திலிங்கம் - தாத்தா**
**Mobile : +14372331767**

தகவல்:
**குடும்பத்தினர்**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - நான் சிரித்தால், இராஜதந்திரம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு